
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

சித்திரை
ஏப்ரல்—1978



ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

விலை 70 காசு

சந்தாதார்கள் கவனிக்க

ஆண்டு தோறும் ரூ. 7 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு **டிபாசிட்** செய்துவிட்டால் தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்து கொண்டிருக்கும். குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு பத்திரிகை வேண்டாம் என்று கருதும்போது தாங்கள் டிபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். டிபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

நிர்வாகி

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—58 | ஏப்ரல் 1978 | இதழ்—4

பொருளடக்கம்

சந்தா எண் 5001 முதல் 5150 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகிறது. மேற்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப அடுத்த ஆண்டுச் சந்தாத் தொகை ரூ. 7—யை ஏப்ரல் மாதம் 25—ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பற்றி......

சில கருத்துக்கள்

நமது 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்ற இனிய தமிழ் வெளியீடு கனியமுதம் போல் சித்தத்தில் தித்திக்கின்றது. சமானமில்லாத பரமஞானியின் திருப்பெயரால் வெளிவரும் இப் பத்திரிகையின் அரிய தெய்விகத் தொண்டை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் இந்த மாத வெளியீடு பரம பவித்திரமான கங்கா ஜலம் போன்ற தூய்மையானது. உள்ளத்தைத் தூய்மை செய்து இறையருளைத் தப்பாமல் நல்கும் இதனைத் தமிழ் மக்கள் அனைவரும் ஒரு பெரும் வரப்பிரசாதமாக ஏற்றுப் படித்து, மிகுந்த பயனைப் பெறுவார்களாக.

அன்பன்

—**கிருபானந்தவாரி**

சில பத்திரிகைகளைப் படிக்கப் புகுவது பார்க்கில் நுழைவது போன்றது. இன்னும் சில பத்திரிகைகளில் நுழைவது உலாவச் செல்வதை ஒத்தது. வேறு சிலவற்றைப் பார்ப்பது கடை வீதிக்குப் போவதைப் போன்றது.

மிகச் சில பத்திரிகைகளையே கோவிலுக்குள் பயபக்தியோடு நுழைந்து வழிபடுவதைப் போன்ற சிரத்தையுடன் படிக்க முடியும். இப்படிச் சிரத்தையோடு படிக்க முடிந்த இதழ்களில் ஸ்ரீராமகிருஷ்ண விஜயமும் ஒன்று. ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து பல்லாண்டுகளாக வெளி வரும் இந்த இதழ் வியாபாரத்துக்காக அந்தரங்க சுத்தியை இழந்து விடாமல் நடத்தப்படும் பத்திரிகைகளில் ஒன்று. ஆத்மசுத்தி—அந்தரங்க சுத்திக்கான விஷயங்களைக் கொண்டு இது வெளி வருகிறது. மாற்றங்கள், ஏமாற்றங்கள், வர்த்தகத் தகிடுதத்தங்களைச் செய்யாமல் வெளிவரும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தை எவ்வளவு பாராட்டினாலும் அதில் ஒரு சொல்லும் மிகையாக இராது என்று நான் துணிந்து கூறுவேன்.

—**நா. பார்த்தசாரதி**

1977 டிசம்பர் இதழ் **'தீபம்'**

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சஞ்சிகையை அவ்வப்போது பார்த்து வருகிறேன். ஒவ்வொரு இல்லத்திலும் இச் சஞ்சிகை விளங்கும் நாள் என்று வருமோ!

இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், அன்னை சாரதாமணி போன்றோரின் அருள்வாக்குகளினால் மட்டுமல்லாமல், அவர்களது அருள் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிவதனாலும் நமது மக்கள் பெரும் பயன் எய்துவர். இப்போது போலவே, தொடர்ந்து அத்தகு தெய்வத் தன்மை வாய்ந்த, நமது மண்ணில் வாழ்ந்திருந்த அப் பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அழகுபடக் கதைகளாக இந்தச் சஞ்சிகை வெளியிடுமானால் அற்புதமான நற்பயன்களை நமது மக்கள் பெறுவர். எல்லாவற்றுக்கும் காலமும் குருவின் அருளும் பாலிக்குமாக.

—**ஜெயகாந்தன்**

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை

— திருமூலர்

தொகுதி 58	காளயுக்தி ஆடு சித்திரை மீ	இதழ் 4



या वर्णपदवाक्यार्थ-गद्यपद्यस्वरूपिणी ।
वाचि नर्तयतु क्षिप्रं मेधां देवी सरस्वती ॥

—श्री त्रिपुरसुन्दरी वेदपादस्तोत्रम्

யா வர்ணபதவாக்யார்த்த–கத்ய–பத்ய–ஸ்வரூபிணீ |
வாசி நர்த்தயது க்ஷிப்ரம் மேதாம் தேவீ ஸரஸ்வதீ ||

—ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ வேதபாத ஸ்தோத்ரம்

எழுத்து, சொல், வாக்கியம், பொருள், உரைநடை, செய்யுள் என்ற வடிவமுடையவளான சரசுவதிதேவி என் வாக்கில் மேதையை நர்த்தனம் செய்யும்படி செய்யட்டும்.

அருட்சோதி தெய்வமெனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்
பொருட்சாரு மறைகளெல்லாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்த தெய்வமுயர் நாதாந்த தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி யீந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

—வடலூர் வள்ளலார்



உலகம் பலவிதம்

ரா. ராமகிருஷ்ணன்

விஷயங்களை உள்ளபடியே புரிந்துகொள்பவர்கள் மிகச் சிலரே ஆவர். பொருள்களைச் சரியான முறையில் கிரகித்து உணரும் சாமர்த்தியம் அனைவருக்கும் இருப்பதில்லை. அரைகுறையாகப் புரிந்து கொள்வதும், கோணல் புத்தியும், மஞ்சட்காமாலைக் கண்ணுக்கு எல்லாமே மஞ்சளாகத் தெரிவது போன்ற ஒரு சார்பான தீர்ப்பும், மக்கள் பலரிடம் காணப்படும் குறைகளாகும்.

பகவத்கீதையில் இரண்டு வகையான மக்களைப் பற்றிக் கண்ணபிரான் குறிப்பிடுகிறார். ஒரு வகையினர் மூடர்கள். மற்றொரு வகையினர் மகாத்மாக்கள். இந்த இரண்டு வகையினருக்கும் உள்ள தூரம் மலைக்கும் மடுவுக்கும் உள்ள தூரம் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களைக் கீதையில் பகவான் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்:

''பொருள்களுக்கு மகேசுவரனாயுள்ள என்னுடைய உயர்ந்த தன்மையை அறியாதவர்களாய், மூடர்கள், மனித உடல் எடுத்துள்ள என்னை அவமதிக்கிறார்கள்.''

''பார்த்தா, மகாத்மாக்களோவெனில் தெய்வத் தன்மையை அனுசரிப்பவர்களாய், வேறு சிந்தை இல்லாதவர்களாய், பொருள்களின் ஆதியும், அழிவற்றவனும் ஆகிய என்னை அறிந்து பூஜிக்கிறார்கள்.''

1

ஸ்ரீராமகிருஷ்ணரின் இல்லறச் சீடர்களுள் மிக முக்கியமான ஒருவர் மகேந்திரநாத் குப்தர். அவர் பரமஹம்சரை முதன்முதலில் சந்தித்த போதே அவருடைய கிருபைக்கு வயப்பட்டு விட்டார். ஸ்ரீராமகிருஷ்ணரின் மகிமையும் இனிமையும் அவரைக் கவர்ந்தன. பிறகு அவர் அடிக்கடி தட்சிணேசுவரம் சென்று குருதேவரைச் சந்தித்து வந்தார். ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணர் அவரை ஒரு கேள்வி கேட்டு வியப்புறச் செய்தார்.

பரமஹம்சதேவர் ஒரு மண்டபத்தில் மகேந்திரநாத் குப்தருடன் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தார். அப்போது குருதேவர் மகேந்திரரிடம், ''உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன். என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? சொல், பார்க்கலாம்'' என்று வினவினார்.

மகேந்திரர் பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தார். மீண்டும் குருதேவர், ''என்னைப் பற்றி உன்னுடைய கருத்து என்ன? கடவுள் ஞானம் என்னிடம் ரூபாய்க்கு எத்தனை அணாக் கணக்கில் உள்ளது?'' என்று கேட்டார்.

மகேந்திரர், ''நீங்கள் குறிப்பிடும் அணாக் கணக்கெல்லாம் எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் எனக்கு நிச்சயம். இதற்கு முன்பு நான், உங்களிடம் இருப்பதைப் போன்ற இவ்வளவு ஞானமும், பிரேமையும், கடவுள் நம்பிக்கையும், வைராக்கியமும், பரந்த மனப்பான்மையும் வேறு எங்கும் கண்டதில்லை'' என்று பதில் சொன்னார்.

இதைக் கேட்ட குருதேவர் சிரித்தார்.

மகேந்திரர் வெகு புத்திசாலித்தனமாகத் தம்மைப் பொருத்தமாக எடைபோட்டுப் பேசினார் என்று குருதேவர் கண்டு திருப்தியுற்றதன் குறிப்பே ஆகும் அவர் சிரித்த சிரிப்பு.

2

இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு வெகு நீண்ட காலத்திற்கு முன்பு, ஸ்ரீராமகிருஷ்ணர் கௌரீகாந்த தர்க்கபூஷணர் என்ற பிரசித்தி பெற்ற பண்டிதர் ஒருவரை ஒரு கேள்வி கேட்டார். ''இந்த என்னுடைய உடலில் ஈசுவரனே அவதரித்திருக்கிறார் என்று வைஷ்ணவசரண் எல்லோரிடமும் சொல்லி வருகிறார்.

அது எப்படி இருக்க முடியும்? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று குருதேவர் கேட்டார்.

அதற்குப் பதிலாகக் கௌரீகாந்தர் ஆழ்ந்த சிந்தனைக் குரலில், ''உங்களைப் பற்றி அவர் இவ்வளவுதானு சொல்கிறார்? அப்படியானால் அவர் மிகவும் குறைவாகத்தான் சொல்லியிருக்கிறார். என்னுடைய உறுதியான நம்பிக்கை என்ன தெரியுமா? நீங்கள் எல்லையில்லாத ஆன்மிகச் சக்தியின் சுரங்கமே ஆவீர்கள். அந்தச் சுரங்கத்தின் மிகச் சிறிய ஓர் அம்சமே அவதார புருஷராக வடிவம் தாங்கி இடையிடையே உலகில் தோன்றி வருகிறது'' என்று தெரிவித்தார். இதைக் கேட்ட பரமஹம்சர் புன்சிரிப்புடன், ''ஆகாகா! நீங்கள் இந்த விஷயத்தில் வைஷ்ணவசரணரையும் விஞ்சிவிட்டீர்கள் போலிருக்கிறதே!'' என்றார்.

3

ஒரு சமயம் பிரதாபசந்திர ஹாஸ்ரா என்பவர் சிறிது காலம் தட்சிணேசுவர ஆலயத் தோட்டத்தில் வாழ்ந்து வந்தார். அவர் போதுமான பக்குவம் இல்லாத ஒரு பிரகிருதி. கோணல் புத்தியும் தாறுமாறான போக்கும் கொண்டவர். சுருக்கமாகச் சொன்னால் அவர் சான்றோர்களால் தவிர்க்கப்பட வேண்டிய ஒரு புள்ளி. பாராட்டிப் பின்பற்றுவதற்குரிய யோக்கியதை ஒன்றும் இல்லாதவர். அவரை ஸ்ரீராமகிருஷ்ணர் சரியாகவே அளவிட்டுப் புரிந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் குருதேவர் ஹாஸ்ராவிடம், ''இங்கு வந்து போகும் மக்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குச் சொல். அவர்கள் ஒவ்வொருவரிடமும் சத்துவகுணம் எந்த அளவுக்கு இருக்கிறது என்று தெரிவி'' என்று கேட்டுக்கொண்டார்.

உடனே ஹாஸ்ரா எல்லாம் தெரிந்தவர் போல, ''நரேந்திரனிடம் (சுவாமி விவேகானந்தரிடம்) நூற்றுக்கு நூறு அம்சம் சத்துவ குணம் இருக்கிறது. என்னிடம் நூற்றுக்கு நூற்றுப் பத்து சதவீதம் சத்துவ குணம் துலங்குகிறது'' என்று சொன்னார்.

''என் விஷயம் எப்படியோ?'' என்று கேட்டார் குருதேவர்.

எல்லா விஷயத்திலும் சத்துவகுணமே வடிவெடுத்தவராக இருந்த பரமஹம்சரைப் பார்த்து, குணாதீதராகவும் விளங்கிய குருதேவரை நோக்கி, அந்தப் பாதி வெந்திருந்த பிரதாபசந்திர ஹாஸ்ரா நாக்கில் நரம்பின்றி, பின்வருமாறு உளறினார்: ''உங்களிடம் இன்னும் கொஞ்சம் இளம் சிவப்பின் (ரஜோ குணத்தின்) சாயை உள்ளது. நூற்றுக்கு எழுபத்தைந்து சதவீதமே அதாவது முக்கால் பங்குதான் உங்களிடம் சத்துவம் உறைகிறது. இதுவே என்னுடைய மதிப்பீடு''என்று அபத்தமாகப் பேசினார்.

கத்திரிக்காய் வியாபாரி ஒருவன் தன்னிடம் விலைக்கு வந்த வைரக்கல்லுக்கு மிக அதிகமாக ஒன்பது சேர் கத்திரிக்காய் மட்டுமே தர முடியும், அதுவே ஈடுக்கு ஈடு ஆகும் என்று சொல்லிப் பேரத்தை முடித்துக்கொண்டானே, அந்தக் கதையையே ஹாஸ்ராவின் 'விவேகம்' நினைவூட்டுகிறது.

பணக்காரனாக மாளிகை வீட்டில் வசிப்பதைவிட, ஏழையாகக் கடவுளின் அருளைப் பெற்று வாழ்வது மேலானது.
—எகிப்திய மதம்

சிவ வழிபாட்டுக்குரிய மலர்கள் எட்டு. அவையாவன: கொல்லாமை, புலனடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு.
—சிவாகமங்கள்

மாலுவக் கொடி கடம்ப மரத்தைச் சுற்றிப் படர்ந்து மரத்தையே அமுக்கிவிடுகிறது. அதேபோல ஒருவனுடைய தீவினையே அவனை அமுக்கிவிடுகிறது; பகைவர்கள் செய்ய விரும்பும் தீமையை அவன் தானாகவே செய்துகொள்கிறான்.
—புத்தர்

ஆத்மா பிறப்பு இல்லாதது. பிறப்பு இல்லாத காரணத்தால் இறப்பும் இல்லாதது. ஜனன மரணம் இல்லாத ஆத்மாவுக்குப் பிறப்பு, வளர்ச்சி, மாற்றம், குறைதல், மரணம் என்பவையும் இல்லை.
—வேதாந்தம்

ஓம்

விஜயதீபம்

விவேகானந்த இதயம்

வேறுபாடு

பண்டைய இந்தியாவின் வரலாற்றில் வீர சிவாஜிக்குக் குருவாக விளங்கிய ஸமர்த்த ராம தாசரும், விஜயநகர சாம்ராஜ்யத்தை உருவாக்கிய வித்தியாரண்ய முனிவரும் ஆன்மிக அடிப்படையில் வாழ்ந்து மக்களுக்கு வழிகாட்டியிருப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் இருவருமே துறவற வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களைப் போலவே மிகச் சிறந்த தேச பக்தராகவும், அதே சமயத்தில் ஆத்மஞானியாகவும் நம்மிடையே சமீப காலத்திலே வாழ்ந்தவர் விவேகானந்தர்.

தற்கால இந்திய மக்களின் முன்னேற்றத்தைக் குறித்தும் தேசபக்தியைக் குறித்தும் பேசியும் வாழ்ந்தும் காட்டியவர்கள் பலர். அவர்களுடைய மேலான இலட்சியம் தலைவணங்கிப் பாராட்டுதற்கு உரியது. ஆகவே அந்த இலட்சியத்தை மேற்கொண்டு வாழ்ந்த உத்தமர் ஒவ்வொருவருக்கும் நாம் மனமார நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த வரிசையிலே விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும், நவீன இந்தியாவின் வரலாற்றில் சிறப்பான தனி இடத்தைப் பெறுகின்றன.

நேரிடையாகவோ மறைமுகமாகவோ விவேகானந்தர் அரசியலிலே ஈடுபட்டது கிடையாது. ஆனால் அவருடைய எழுச்சிதான், உறங்கிக் கிடந்த இந்தியாவை எல்லா வகைகளிலும் பலமாகத் தட்டி உலுக்கியது. அதன் ஓர் அம்சமாகவே இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்ட முதலாமவர்களின் முதற் பட்டியலிலே முதலிடத்தை, சுவாமி விவேகானந்தருக்குப் பெருமையோடு இந்த நாட்டில் தோன்றிய உண்மைத் தேசபக்தர்கள் மனமுவந்து வழங்கியிருக்கிறார்கள்.

உயர்ந்த மனோபாவம் கொண்ட பல தேசபக்தர்களைப் போலவே, சுவாமி விவேகானந்தரும் தேசபக்தியையும் பாமரர் முன்னேற்றத்தையும் குறித்து விரிவாகப் பேசியிருக்கிறார். பார்ப்பதற்கு, இந்த வகையைச் சேர்ந்த சான்றோர்களின் தேசபக்தியைப் போலவே விவேகானந்தரின் தேசபக்தியும் இருப்பதாகத் தோன்றும். ஆனால், மற்றத் தேசபக்தர்களுக்கும் சுவாமி விவேகானந்தருக்கும் அடிப்படை மனநிலைகளில் சில வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன.

பொதுவாகச் சகோதர மக்களிடம் கொள்ளும் தூய அன்பும், இரக்கமும், நாட்டின் முன்னேற்றத்தில் கொள்ளும் ஆர்வமும், ஒருவரிடம் தேசபக்தியைத் தோற்றுவிக்கின்றன. சுவாமி விவேகானந்தரின் தேசபக்தியில் இந்தப் பண்புகள் பரிபூர்ணமான அளவிலே இருந்ததுடன் 'ஆன்மிக அநுபவம்' என்னும் உயர்வற உயர்ந்த ஒரு பண்பும் கலந்திருந்தது. இதுவே பொதுவாக மற்றத் தேசிய வீரர்களின் தேசபக்திக்கும் சுவாமி விவேகானந்தரின் தேசபக்திக்கும் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடு எனலாம்.

விவேகானந்தரின் தேசபக்திக்குள்ள ஓர் ஈடு இணையற்ற தனிப்பெருஞ் சிறப்பு, அவருடைய ஆன்மிக அனுபூதியிலேதான் அடங்கியிருக்கிறது. ஆகவேதான், அவரால் சமயத்துறையிலும் சமுதாயத்துறையிலும் குறிப்பிடத்தக்க நிலையான ஒரு மறுமலர்ச்சியை ஒரே சமயத்தில் தோற்றுவிக்க முடிந்தது. இந்த இரண்டு துறைகளில்

ஏதாவது ஒன்றில் குறிப்பிடத்தக்கவர்களாக நாம் பலரைச் சொல்ல முடியும். இரண்டிலும் குறிப்பிடத்தக்கவர்களாகச் சிலரை மட்டுமே நாம் சொல்ல முடியும். அவர்களில் விவேகானந்தருக்கே முதலிடம் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

தெய்விகமே அடிப்படை

எங்கும் எதிலும் இறைவனைக் காண்பதே மத வாழ்க்கையில் ஒருவர் பெறக்கூடிய மிகமிக உயர்ந்த நிலையாகும். 'ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்', 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்று வேதங்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய மேலான அனுபவம் குறைவறக் கைவரப் பெற்றவர் விவேகானந்தர். இதுவே, அவருடைய சமுதாய முன்னேற்றம் பற்றிய எல்லாக் கருத்துக்களுக்கும் அடிப்படை.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற தலைப்பில் கடந்த இதழ்களில் விவேகானந்தரின் கருத்துக்களில் சிலவற்றைத் தொகுத்துக் கொடுத்திருந்தோம். அந்தக் கருத்துக்களைக் கூர்ந்து கவனித்தால் சுவாமிஜியின் கருத்துக்கள் எந்தக் கோணத்திலிருந்து சொல்லப்பட்டிருந்தாலும், எங்கும் எதிலும் தெய்வத்தைக் காணும் பண்பு பொதிந்தவையாக இருப்பதைக் காணலாம்.

மனிதன் கடவுள்நிலையைப் பெற வேண்டும். அதன் முதல் கட்டமாக அன்னியர்களின் பிடியிலிருந்து அவன் விடுதலை பெற வேண்டும். அதாவது ஆன்மிக விடுதலைக்குத் தேசிய விடுதலை முதலாவதாகத் தேவை என்பதை விவேகானந்தர் உணர்ந்திருந்தார்.

எனவேதான் சீர்திருத்தம், பாமரர் முன்னேற்றம், தேசபக்தி, தேசத் தொண்டர்கள் பெற்றிருக்க வேண்டிய பண்புகள் ஆகியவை பற்றி அழுத்தம் திருத்தமாக அவர் ஏராளமாகப் பேசினார்.

மனிதன் உண்மையில் தெய்வமே ஆவான். ஆனால் நடைமுறை வாழ்க்கையிலோ, அவன் தாழ்வின் பாதாளத்தில் புழுவைப் போல ஊர்ந்து நெளிந்தபடி இருக்கிறான் - இதைப் பொறுக்க மாட்டாமல் பாமரர் முன்னேற்றம் பற்றியும் தேசபக்தியைப் பற்றியும் இதய இரத்தம் கசிய விவேகானந்தர் உள்ளம் நெகிழ்ந்து பல கருத்துக்களை மழை போலப் பொழிந்திருக்கிறார்.

''கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை - இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்துகொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்'' என்பதைப் போன்ற சுவாமி விவேகானந்தரின் பல கருத்துக்கள் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்திலேயே வெளிவந்திருப்பதால், தனியாக இந்த இதழ் விஜயத்தில் அவற்றைத் தொகுத்துத் தராமல் விட்டிருக்கிறோம்.

பேலூர் மடத்தில்

சுவாமி விவேகானந்தர் ஒரு சமயம் பேலூர் மடத்தில் இருந்தார். அப்போதுதான் மடம் உருவாகிக்கொண்டிருந்தது. மடத்தில் கட்டிட வேலைகளும் நடைபெற்று வந்தன.

ஸாந்தால் என்ற வகுப்பினர், சமுதாயத்தின் 'மேற்குடி' மக்களால் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒதுக்கிப் புறக்கணிக்கப்பட்டவர்கள். வறுமையும் எளிமையும் மிக்க அந்த வகுப்பைச் சேர்ந்த தொழிலாளர் சிலர், பேலூர் மடத்தில் தோட்டவேலை செய்வதற்காக வந்திருந்தார்கள்.

சுவாமிஜி அந்தத் தொழிலாளர்களுடன் மனம் திறந்து பேசிக்கொண்டிருப்பார். அவர்களும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடன் பழகுவதைப் போலவே சுவாமிஜியிடம் நெருங்கிப் பழகினார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் துன்பங்களை எல்லாம் ஆழ்ந்த அனுதாபத்துடனும் கவனத்துடனும் சுவாமிஜி கேட்டுக்கொண்டிருப்பார். அந்தத் தொழிலாளர்களிடம் சுவாமிஜிக்கு எவ்வளவு ஈடுபாடு இருந்தது என்பதை, அவர் தம்மைக் காண வந்த பெரும் கனவான்களிடம், ''நான் இந்த ஸாந்தால்களுடன் இருப்பதிலேயே எல்லையில்லாத மகிழ்ச்சியைக் காண்கிறேன்'' என்று சொல்லியிருப்பதன் மூலம் அறியலாம்.

அந்தத் தொழிலாளர்களிடையே கேஷ்டா என்ற பெயருள்ள ஒருவன் இருந்தான். சுவாமிஜிக்கு அவன்மேல் அபரிமிதமான அன்பு இருந்தது. இருவரும் மிகவும் நெருக்கமாகப் பழகினார்கள்.

தொழிலாளர்களின் வேலைகளைக் கவனித்து மேற்பார்வையிடும் பொறுப்பு, சுவாமி அத்வைதானந்தருக்குத் தரப்பட்டிருந்தது.

சுவாமிஜியும் தொழிலாளர்களும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆகவே தொழிலாளர்கள் செய்து வந்த கட்டிட வேலையும் அவ்வப்போது தடைப்பட்டது. இதைக் கவனித்த அத்வைதானந்தர் ஸாந்தால்களை மிகவும் கோபித்துக் கொண்டார். இது சுவாமிஜிக்குத் தெரிய வந்தது. அவர் அத்வைதானந்தரை அழைத்து, ''இந்த ஏழை எளிய மக்களிடம் அதிகப்பட்சம் முடிந்தவரையிலும் தயை காட்ட வேண்டும். அவர்களைக் கண்டிக்க வேண்டாம்'' என்று அன்பு ததும்பக் கூறினார். ஸாந்தால்களிடம், ''இனிமேல் உங்களைக் கடிந்துகொள்ள வேண்டாம் என்று அத்வைதா



னந்தரிடம் சொல்லி வைத்திருக்கிறேன்'' என்று இதயத்தைத் தொடும் வகையில் தமக்கே உரிய இயல்போடு உறுதி கூறினார்.

ஒரு சமயம் சுவாமிஜியும் கேஷ்டாவும் வழக்கப்படி பேசிக்கொண்டிருந்தார்கள். கேஷ்டா தன் துன்பங்களையெல்லாம் சுவாமிஜியிடம் தெரிவித்தான். அவற்றைக் கேட்டவுடனே சுவாமிஜியின் கண்கள் குளமாகிவிட்டன. கண்ணீர் விட்டே அவர் அழுதுவிட்டார். கேஷ்டாவும் இதை எதிர்பார்க்கவில்லை. அவனுக்கே பொறுக்க முடியாமல் சுவாமிஜியிடம் அவன், ''சுவாமிஜி! இங்கிருந்து போய்விடுங்கள். உங்களை அழவைத்து எங்கள் கஷ்டத்தை நான் சொல்லமாட்டேன்'' என்று சொன்னான்.

ஒரு நாள் அந்த ஸாந்தால் தொழிலாளர்களுக்குத் தடபுடலாக ஒரு பெரிய விருந்து வைக்க வேண்டும் என்று சுவாமிஜி தீர்மானித்தார். அந்த யோசனையை அவர் ஸாந்தால்களிடம் தெரிவித்தார்.

ஸாந்தால்களோ, ''நீங்கள் உணவில் உப்புப் போட்டுக் கொடுப்பீர்கள். அதைச் சாப்பிட்டால் எங்களுடைய ஜாதி போய்விடும். ஆகவே நீங்கள் கொடுக்கும் விருந்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம்'' என்று சொல்லி மறுத்தார்கள்.

சுவாமிஜி, ''உப்பை நான் உணவில் கலக்காமல் தனியாக உங்களுக்குத் தரச் செய்கிறேன்'' என்று அவர்களுடைய மனம் புண்படாதபடி ஆறுதல் சொல்லிச் சமாதானப்படுத்தினார்.

அதன்படி தொழிலாளர்களும் சுவாமிஜி தரும் விருந்தை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டனர்.

இனிப்பு, பூரி, கறிவகைகள், பழங்கள், தயிர் என்று தாமே முன்னின்று பெரிய விருந்துக்குச் சுவாமிஜி ஏற்பாடுகளைச் செய்தார். அவற்றைக் கொண்டு ஸாந்தால்களுக்கு மனநிறைவோடு விமரிசையாக விருந்து வைத்தார். அவர்கள் திருப்தியுடன் சாப்பிடுவதை மகிழ்ச்சி பொங்க அருகிலேயே இருந்தும் கவனித்தார்.

வாழ்க்கையில் அதுவரையிலும் அவ்வளவு உயர்ந்த உணவு வகைகளை அந்த ஸாந்தால்கள் சாப்பிட்டதே கிடையாது. அவர்கள், ''சுவாமிஜி! இந்தப் பலகாரங்களையெல்லாம் எங்கேயிருந்து கொண்டு வந்தீர்கள்? நாங்கள் கனவில்கூட இப்படிப்பட்ட உணவு வகைகளைப் பார்த்ததே இல்லை'' என்று சொன்னார்கள்.

விருந்து முடிந்ததும் சுவாமிஜி அவர்களிடம் உள்ளம் நெகிழச் சொன்னார்: ''நீங்கள் எல்லோரும் நாராயணர்கள். உங்களுக்கு உணவிட்டு இன்றைய தினம் நான் ஆண்டவனுக்கே உணவளித்துவிட்டேன்.''

அதோடு மட்டுமின்றி, இந்த நிகழ்ச்சியைப் பற்றி வேறொரு சமயம் தமது சீடர் ஒருவரிடம் பேசியபோதும், பின்வருமாறு சுவாமிஜி குறிப்பிட்டிருக்கிறார்: ''நான் விளையாட்டுக்காகச் சொல்லவில்லை. உண்மையாகவே பகவானை

நான் அந்த ஸாந்தால்களிடம் பார்த்தேன். குற்றமற்ற இந்த எளிய இதயம் படைத்த மக்களிடம் காணுமல் வேறு எங்கே ஆண்டவனைக் காண முடியும்?''

விவேகானந்தர் செய்த பூஜை

சுவாமி விவேகானந்தர் ஸாந்தால்களிடம் தெய்வத்தைக் கண்டார் என்பதை மேலே பார்த்தோம். இதைப் போலவே சுவாமி போதானந்தர் தெரிவித்துள்ள நிகழ்ச்சி ஒன்றையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

சுவாமிஜியின் சீடர்களிலே சுவாமி போதானந்தரும் ஒருவர். அவர் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சில காலம் தங்கியிருந்தபோது, மடத்தில் இருந்த துறவிகள், ''சுவாமிஜியுடன் நீங்கள் பெற்ற அனுபவங்கள் சிலவற்றை எங்களுக்குச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு விடையாக, சுவாமி போதானந்தர் தெரிவித்த கருத்துக்களில் ஒரு பகுதி அப்படியே கீழே தரப்படுகிறது:—

''ஒரு நிகழ்ச்சியை நான் (சுவாமி போதானந்தர்) உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு சமயம் சுவாமிஜி, தாம் அன்றைய தினம் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பூஜைசெய்து வழிபடப் போவதாகச் சொன்னர். ஆகவே சீடர்களான நாங்கள் அனைவரும் சுவாமிஜியின் பூஜைமுறையைக் கவனிப்பதற்காகச் சென்றோம்.

''பூஜைக்கிரியைகளை அவர் எப்படிச் செய்யப் போகிறார் என்பதைக் காணும் ஆவலால் அங்கே கூடினேம்.

''முதல்முதலாக அவர் பூஜை செய்பவர் உட்கார வேண்டிய ஆசனத்தில் உட்கார்ந்தார். பிறகு தியானம் செய்ய ஆரம்பித்தார். நாங்களும் தியானம் செய்ய ஆரம்பித்தோம்.

''வெகு நேரம் கழிந்தது. யாரோ ஒருவர் எங்களுக்கு மத்தியிலே நடந்துகொண்டு இருப்பதாக எனக்கு உணர்ச்சி ஏற்பட்டது. ஆகவே, இந்தச் சமயத்தில் நடந்து செல்வது யாராக இருக்கக்கூடும் என்பதைப் பார்ப்பதற்காக நான் கண்களைத் திறந்தேன். சுவாமிஜியே அவர். அவர் ஆசனத்தை விட்டு எழுந்திருந்து, ஸ்ரீராமகிருஷ்ணரை வழிபடுவதற்காக வைத்திருந்த பூத்தட்டைக் கையில் ஏந்தி வந்தார். ஆனால் மலர்களை ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவத்தின் முன்பு சமர்ப்பிப்பதற்குப் பதிலாக அவர் தமது சீடர்களாகிய எங்களை நோக்கி வந்தார். மலர்களைச் சந்தனத்தில் தோய்த்தெடுத்து எங்கள் ஒவ்வொருவருடைய தலை மீதும் ஒரு மலரை இட்டார்.

''பொதுவாக வைதிகச் சம்பிரதாயங்களின் படி அவருடைய இந்தச் செய்கை, முறைக்கு மாறான ஒன்றாகும். தெய்வத்தை வழிபடுவதற்காக வைத்திருந்த மலர்களைக் கொண்டு, குரு ஒருவர் தம்முடைய சீடர்களுக்கு இடுவதைக் கனவில்கூட யாரும் நினைத்துப் பார்க்கமாட்டார்கள். மேலும், முதலில் வேறொரு காரியத்திற்குப் பயன்படுத்தப்பட்ட எந்தப் பொருளையும் பிறகு தெய்வத்திற்குப் பயன்படுத்துவது தவறாகும்.

''ஆனல் சுவாமிஜியோ ஸ்ரீராமகிருஷ்ண பகவானின் பீடத்தை அணுகி, தட்டில் மீதியிருந்த மலர்களை அவருடைய திருவுருவத்தின் முன்பு சமர்ப்பித்தார். மேலும், வழக்கமாகச் செய்ய வேண்டிய பூஜைக்கிரியைகளையும் அவர் செய்யாமலே விட்டுவிட்டார்.

''பின்பு பரமஹம்சரின் பூஜையின்போது, வழங்கவேண்டிய நைவேத்தியத்தைக் கொண்டு வந்து வைக்கும்படி சைகை செய்தார்.

''நைவேத்தியத்தைப் பகவானுக்குச் சமர்ப்பிக்கும் நேரத்தில் பூஜையறையில் ஒருவரும் இருப்பது வழக்கமில்லை. ஆகவே நாங்கள் அனைவரும் எழுந்திருந்து அறையை விட்டு வெளியேறினேம். அந்தச் சமயத்தில் சுவாமிஜி, ஸ்ரீகுருமகராஜைப் பார்த்து, 'நண்பரே, இந்த நைவேத்தியத்தை நீங்கள் சாப்பிடுங்கள்' என்று சொன்னது எங்கள் காதில் விழுந்தது. பிறகு அவர் பூஜையறையை விட்டு வெளியே வந்து, அந்த அறையின் கதவுகளை மூடினர். அப்போது அவருடைய கண்கள் பக்திப் பரவசத்தால் செக்கச் செவேலென்று சிவந்த நிறம் கொண்டவையாக மாறியிருந்தன.''

இந்தச் செயலைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே சுவாமி போதானந்தர் உணர்ச்சி வசப்பட்டுவிட்டார். சில நிமிடங்கள் வரை அவரால் பேச முடியவில்லை. பிறகு மயிலாப்பூர் மடத்தின் சாது ஒருவர் அவரிடம், ''மகராஜ், சுவாமிஜி அவ்விதம் தம்

முடைய சீடர்களையே வழிபட்டதன் கருத்து என்ன?'' என்று கேட்டார். அதற்குப் பதிலாக, சுவாமி போதானந்தர் கூறியது வருமாறு:—

''உண்மையிலேயே சுவாமிஜி அந்தச் சமயத்தில் தம்முடைய சீடர்களைப் பூஜிக்கவில்லை. எங்கள் ஒவ்வொருவருடைய தலையின் மீதும் பூவை வைத்தபோது, ஒவ்வொரு சீடரிடமும் எழுந்தருளியிருந்த ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவடிகளில்தான் மலரை உண்மையில் சமர்ப்பித்தார். அப்படிச் செய்ததன் மூலம் எங்களிடம் எழுந்தருளியுள்ள பரமஹம்சரின் தெய்விகச் சாந்நித்தியத்தை எழுப்பியருளினார்.

''அந்தச் சாந்நித்தியம் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு வகையில் வடிவெடுத்திருந்தது. சிலர் பக்தி நிறைந்தவர்களானார்கள். மற்றும் சிலரிடம் ஞான உணர்வுகள் எழுப்பப்பட்டன. சுவாமிஜி, தாம் அப்படிச் செய்த பூஜையின் மூலமாக எங்களுக்குள்ளே இருந்த தெய்விக இயல்புகளை எழுப்பிவிட்டார். எஞ்சியிருந்த மலர்கள் எந்த விதத்திலும் அசுத்தம் அடையவில்லை.

''பீடத்தில் இருந்த ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப்படத்தில் சுவாமிஜி எந்தத் தெய்விகச் சாந்நித்தியத்தைக் கண்டாரோ, அதே தெய்விகச் சாந்நித்தியத்தையே அவர் தமது சீடர்களிடமும் கண்டார். ஆகவே ஸ்ரீராமகிருஷ்ணரின் பீடத்தில் மீதியிருந்த மலர்களை அவர் அர்ப்பணம் செய்தார். அப்போது சுவாமிஜி, தமது இஷ்ட தெய்வத்திடம் தோழமை உறவையே கொண்டிருந்தார். அந்தக் காரணத்தினால்தான், நைவேத்தியத்தைப் படைத்தபோது ஸ்ரீராமகிருஷ்ணரை அவ்விதம் 'நண்பரே' என்று அழைத்தார்.''

முடிவுரை

சுவாமிஜியின் தேசபக்திக் கருத்துக்களுக்கு எல்லாம், அவருடைய ஆன்மிக உணர்வுகளே ஆதாரசுருதியாக அமைந்திருக்கின்றன. சிலர் சுவாமிஜியின் தேசபக்தி, கல்வி, பாமரர் முன்னேற்றம் ஆகிய கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு பாராட்டுவது உண்டு. அத்தகையவர்கள், ''விவேகானந்தரின் தேசபக்திக் கருத்துக்கள் அனைத்தும் எங்களுக்கு முற்றும் உடன்பாடானவை. அவர் மதத்தைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களுள் எதைப் பற்றியும் எங்களுக்கு அக்கறை இல்லை; அவை தேவையற்றவை'' என்று சொல்வதுண்டு. ஆனால் இவ்விதம் சுவாமிஜியின் ஒருபகுதிக் கருத்துக்களை மட்டும் ஏற்றுக்கொண்டு மறு பகுதியாக விளங்கும் பெரும்பகுதியை விலக்கிவிடுவது பொருந்தாது. ஏனென்றால், கிட்டத்தட்ட ஓர் அவதாரபுருஷர் என்று சொல்லத்தக்க வாழ்க்கையாகச் சுவாமிஜியின் வாழ்க்கை அமைந்திருக்கிறது. உண்மை இவ்விதம் இருக்க, அவரிடமிருந்து மிக முக்கியமான பகுதியாகிய ஆன்மிகத்தை நீக்கிப் பார்த்தால், சுவாமிஜியை முழு அளவில் புரிந்துகொள்ள முடியாது. அப்படிப் பார்ப்பவர்கள், குருடர்கள் கண்ட யானையைப் போலச் சுவாமிஜியைப் பற்றி ஒரு சிறிது மட்டுமே புரிந்துகொண்டவர்கள் என்று மட்டும்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.



என் உடம்பிலேயே நீ, ஜீவாத்மா பரமாத்மா என்ற பேதமின்றி ஒன்றாக நின்று உலவுகிறாய். இதை நான் அறியாமல், 'நான்' என்ற அகந்தை கொண்டேன்; நன்மைகளை இழந்தேன்.

—பட்டினத்தார்

ஒருவன் தனக்கு என்ன வேண்டுமென்று விரும்புகிறானோ, அதுவே தன் சகோதரனுக்கும் வேண்டுமென்று விரும்புகிறவன்தான் உண்மையான கடவுள் நம்பிக்கை உடையவன்.

—நபிகள்நாயகம்



துன்பம் துடைக்கும் வழி

திருமுருக கிருபானந்தவாரியார்

உலகிலே பிறந்த உயிர்கள் அனைத்தும் பலப் பல எண்ணங்களுடன் வாழ்கின்றன. ஒரு தந்தைக்கு ஒரு தாய் வயிற்றில் இரு மக்கள் பிறந்தன. ஒன்று தாய் தந்தையருக்கு அடங்குகிறது. மற்றொன்று அடக்குகிறது.

ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்கள் குணம் வேறு, நடை வேறு, முகபாவங்கள் வேறு, நிறம் வேறு, திறம் வேறு; இவ்வாறு எல்லாவற்றிலுமே மாறுபாடுகளுடன் இருக்கிறார்கள். தாய் கேகசி, தந்தை விச்சிரவசு. இவர்களுக்குப் பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பணகை என்பவர்கள்.

இந்த நால்வரும் வெவ்வேறு இயல்புகளையுடையவர்கள். இராவணன் மூர்க்கன். கும்பகர்ணன் நல்லவன், ஆனால் முரடன். விபீஷணன் பரம சாது. விபீஷணர் என்ற பேர் சிவபெருமானுடைய ஆயிரம் நாமங்களில் ஒன்று.

விபீஷணன்—பயம் இல்லாதவன். எல்லோருக்கும் மரண பயம் உண்டு. சிவபெருமான் காலனை உதைத்த காலகாலன். அவர் ஒருவர் தாம் பயம் இல்லாதவர். சிவ சகஸ்ரநாமம் மகாபாரதத்தில் அநுசாசன பர்வத்திலே, உபமன்யு முனிவர் கண்ணபிரானுக்கு உபதேசித்தார் என்று வருகிறது.

அடுத்து, சூர்ப்பணகை. சூர்ப்பம்—முறம்; முறம் போன்ற நகங்களையுடையவள்.

சூர்ப்பணகை மிகவும் பொல்லாதவள். ஒரு வயிற்றில் பிறந்தவர்கள் இவ்வாறு குணங்களால் வேறுபடுகின்றார்கள்.

ஒன்று போலவே இல்லாமல் மக்கள் வெவ்வேறு இயல்புகளுடன் வாழ்கிறார்கள். ஆனால் ஒன்றில் மட்டும் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. ''துன்பம் இன்றி இன்பத்துடன் வாழ வேண்டும்'' என்று கருத்து வேற்றுமையின்றி எல்லோரும் எண்ணுகிறார்கள்.

இந்துவோ? முஸ்லிமோ? கிறிஸ்துவரோ? அரசியல்வாதியோ? சமயவாதியோ? வடநாட்டினரோ? தென்னாட்டினரோ? ஆணோ? பெண்ணோ? முதியவரோ? இளைஞரோ? முந்தி இருந்தவரோ? இப்போது இருக்கிறவரோ? இனி இருக்கப் போகிறவரோ? எல்லோரும் துன்பமின்றி இன்பத்துடன் வாழ வேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள். ஆனால் யாராவது துன்பமின்றி இன்பத்துடன் வாழ்கிறார்களா? இல்லை. நமக்கு வரும் துன்பங்கள் ஒன்றா? இரண்டா? பலப் பல.

பலதுன்ப முழன்று கலங்கிய
சிறியன் புலையன் கொலையன் புரி
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே

என்கிறார் அருணகிரிநாதர்.

இன்பம் வேண்டும் என்று எண்ணுகிற நாம் துன்ப விதை தூவுகிறோம். துன்ப விதை தூவினால் இன்பம் எப்படி விளையும்?

''கடவுளே! நான் எப்போதும் தப்பாது உன்னையே நினைக்கிறேனே? எனக்கு இத்தனை துன்பமா? உனக்குக் கண் இருக்கிறதா?''

''நான் சஷ்டி விரதம் இருக்கிறேன். மாதாந்த வெள்ளிதோறும் திருச்செந்தூர் சென்று வழிபடுகிறேன். இப்படியிருந்தும் என் அருமந்த மகன் மாண்டுவிட்டானே? உன்னை வணங்கி என்ன பயன்? இனிக் கோயிலுக்கு வர மாட்டேன்'' என்று கூறித் தெய்வத்தைச் சலித்துக்கொள்ளுகிறார்கள். இது பேதைமை. ஒருவன் ரயிலிலே பயணம் செய்யும்போது, அவன் வாங்கிய ஸ்டேஷனில் அவனை ரயிலை விட்டு இறக்கினால், இதற்காக டெல்லியில் இருக்கிற ரயில்வே மந்திரியைக் குறை கூறலாமா?

இதுபோல் ஆன்மாக்கள் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பச் சுகதுக்கங்களை இறைவன் தருகிறான். நாம் அனுபவிக்கும் இன்ப துன்பத்திற்கு இறைவன் காரணன் அல்லன். நாம் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். இந்தக் கருத்தைப்

பிரம்மதேவர் மற்றத் தேவர்களுக்கு அறிவிக்கிருர்.

அவரவர் வினைகள் நாடி
அதற்படு பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம்
சிறந்தநோன் பியற்றி டாதே
தவறுசெய் தனம்என் றெம்மை
நோவதே தக்க தென்ருர்.
—கந்தபுராணம்

ஆதலால் நாம் அனுபவிக்கிற துன்பங்களுக்குக் காரணம் இறைவன் அல்லன். நாம் முன்செய்த தீவினையே காரணமாகும். நாம் முற்பிறப்பில் செய்த பாவங்களின் பயனை இப்போது நுகர்கிருேம் என்று கருதிச் சமாதானமாக வினைப்பயனை அனுபவிக்க வேண்டும்.

உற்றநோய் நோற்றல்;
உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

என்கிருர் திருவள்ளுவத் தேவர்.

நோய்-துன்பம்; நோற்றல்-தாங்கிக்கொள்ளுதல். துன்பத்தைக் கண்டு துடிக்காமலும் துவளாமலும் அமைதியாக அனுபவிக்க வேண்டும்.

ஒருவர் நமக்குத் துன்பம் செய்வாராயின் அவர்கள்மீது சீற்றம் அடைதல் கூடாது. அவர்களை வெறுக்கவும் கூடாது. நாம் செய்த வினை, இவர்கள் மூலம் துன்பம் வருகிறது என்று எண்ணி மனம் சாந்தியடைய வேண்டும்.

இதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். சீதாதேவியை அசோகவனத்தில் கொடிய அரக்கியர் அல்லும் பகலும் அல்லற்படுத்தினுர்கள். இராவணனை வதம்செய்து இராமர் வெற்றிமாலை சூடினுர். அனுமார் சீதையிடம் வந்து வணங்கி, ''அம்மா! ஸ்ரீராம ஜயம்! இராவணன் மாண்டுவிட்டான்'' என்று இயம்பினுர். சீதாபிராட்டியாருக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. ''மகனே! ஆஞ்சனேயா! உனக்கு முன்னே சிரஞ்சீவியாக இருக்க வரம் உதவினேன். இப்போது என்ன வரம் வேண்டுமோ கேள்'' என்ருள்.

அனுமார், ''தாயே! நான் மூவாசையும் இல்லாதவன். எனக்கென்று ஒன்றும் தேவையில்லை. அந்தப் பத்து மாதங்களாகத் தேவரீரை வாட்டி வதைத்த இந்தக் கொடிய அரக்கியரைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும். ஆதலால் இவர்களைத் தீயிட்டு எரிக்கும் வரத்தை வழங்குமாறு வேண்டுகிறேன்'' என்று வரம் கேட்டார். மற்றவர்களாயின், 'நல்லது, மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்து' என்று கூறியிருப்பார்கள். பரமஞானியாகிய ஜனகர் பெற்ற அந்தச் சீதாதேவி அப்போது என்ன கூறினுள்?

''அப்பா! அனுமானே! இந்த அரக்கியர் என்னைத் துன்புறுத்தவில்லை. நான் துன்பத்தைத் துய்ப்பதற்குக் காரணம் இவர்கள் அல்லர். என் வினைதான் காரணம். தவநெறியில் நின்ற என் கணவரை 'மானைப் பிடித்துக் கொடுங்கள்' என்று மானின்பின் அனுப்பினேன். அது பிழையல்லவா? என் அருகில் காவலாக இருந்த இலக்குவனை நிந்தனை செய்து போகச் செய்தேன். என் அருகில் இலக்குவன் இருந்திருந்தால் ஈராயிரம் இராவணர்கள் ஒருங்கே வந்தாலும் என்னைக் கவர முடியுமா? முடியாது.



''உணவும் உறக்கமும் துறந்து, சுகத்தை மறந்து, என்னைக் காத்து நின்ற பரம பக்தனுகிய இலக்குவனை நான் கொடும் சொற்களால் மனதை நோக வைத்து அனுப்பினேன். அந்த வினைப்பயனுல் இந்த இடர் வந்தது.

''செய்வான், செய்வினை, வினைப்பயன், சேர்ப்பான் என்ற இந்த நான்கு தன்மைகளை உணர்வதுவே உத்தம ஞானம். இராவணனுடைய ஏவலர்களாகிய இந்த அரக்கியர் தங்கள் எஜமான் இட்ட கட்டளைப்படியே என்னை இடர்ப்படுத்தினுர்கள். ஆதலால் இவர்களை நோவலாமா? என்னுடைய இல்லத்தில் இருந்து என்னுடைய உடையை உடுத்து, என்னுடைய உணவை உண்ட கூனி எனக்குப் பெருந்துயர் விளைவித்தாள். அதையே நான் பொறுத்து வந்தேன். அந்தக் கூனியைவிட இவர்கள் கொடி

யவர்களா? இல்லை! ஆகவே நடந்ததை இனிச் சிந்திக்கக்கூடாது'' என்று அன்பும் அருளும் ஒழுக அறவுரை பகர்ந்தாள்.

ஆதலால், துன்பத்தை நுகர்கிறவர்கள் கடவுளையோ மற்றவர்களையோ நோவக் கூடாது. நம் வினையைத்தான் நோவ வேண்டும்.

நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டும் என்றால், மற்றவர்க்கு மன வாக்குக் காயங்களால் துன்பம் செய்யக்கூடாது. நன்மையே செய்ய வேண்டும். இதுதான் பண்பாடு.

துன்பம் வினையினால் விளைகிறது. விதை இல்லையேல் செடிகொடிகள் இல்லை; வேரின்றி மரம் இல்லை. பால் இல்லையேல் நெய்யில்லை. இதுபோல் வினை இல்லையேல் துன்பம் இல்லை. துன்பங்களுக்குக் காரணம் வினைகள்தாம் என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும்.

நாம் இறவாமல் இருக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரு வழியுண்டு. அது யாது? இறவாமல் இருக்க வேண்டும் என்றால் பிறவாமல் இருக்க வேண்டும். நாம் எங்கே சென்றாலும் நம் நிழல் நம்மைத் தொடர்ந்து வருகிறது. நம் நிழலை நிறுத்த ஒரு வழியுண்டு. அது என்ன வழி? நாம் இன்னொரு நிழலுக்குச் செல்ல வேண்டும். நிழலுக்குச் சென்றால் நம் நிழல் நின்றுவிடும். இதுபோல் வினை இல்லையானால் துன்பமே இல்லாமல் ஒழியும்.

''இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'' என்கிறார் அப்பரடிகள். தொல்வினை என்ற சஞ்சித வினை, இறைவனிடம் பக்தி செய்வதாலும் ஜபம் தவம் பாராயணம் முதலிய வழிபாட்டாலும் தொலையும். பக்தி செய்வோர்க்கு இறையருள் வெளிப்பட்டால் வினை விலகும்.

அல்லல் என்செயும்? அருவினை
என்செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தந்தான்
என்செயும்?
தில்லைமா நகர்ச் சிற்றம்பல வனுர்க்கு
எல்லையில்லா தோர் அடிமைபூண்
டேனுக்கே.

நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத்
தொழுமினே.

—அப்பர்.

இந்தத் தெய்வத் திருமறையமுத வாக்குகளை ஓர்க; உய்க. ஆதலால் அன்பர்கள் துன்பம் தொலைந்து இன்பம் ஓங்க வேண்டும் என்று கருதுவீர்களானால் தீவினை புரியாது தினையளவேனும் இறைவனை மறவாது அன்புநெறி நின்று அருள்மயமாகிச் சிவசிந்தையுடன் இருங்கள். அவநெறி அகன்று சிவநெறியில் செல்லுங்கள். இதுதான் துன்பம் துடைக்கும் வழி.

பிறர் குற்றத்தை மன்னித்து விடுவது மனிதத் தன்மை; மறந்து விடுவது தெய்வத் தன்மை; படிப்பாலும் பணத்தாலும் கடவுளைக் காண முடியாது; பக்தியினால்தான் கடவுளைக் காண முடியும். தனக்குள்ளே கடவுள் இருக்கத் தரணியெங்கும் பலர் கடவுளைத் தேடுகிறார்கள். எந்த நேரம் இறைவனுடைய திருநாமம் நினைக்கப்பட்டதோ அது நம்முடைய நேரம். எது தருமத்தில் செலவழிந்ததோ அது நம்முடையது.

இயற்கைச் சூழ்நிலை காரணமாக வேறு வேறு நாடுகளில் வேறு வேறு பழக்க வழக்கங்களும், பிரார்த்தனை முறைகளும், சடங்குகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றைக் காரணமாகக் கொண்டு மக்கள் சச்சரவு செய்யக்கூடாது. —திருக்குரான்

மக்கள் ஒவ்வொருவரும் சுயநலம், பேராசை ஆகியவற்றைப் பொதுநலத்திற்காகவும் நாட்டுநலனுக்காகவும் விட்டுக்கொடுப்பார்களேயானால், நாடு இன்றுள்ள நிலையைவிட மிகச் சிறப்பான நிலையில் அமையும். —டாக்டர் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன்



ஆண்டவன் அறிவார்

அ. லெ. நடராஜன்

ஒரு பெரிய வியாபாரி பணப்பையுடன் சந்தையிலிருந்து திரும்பினன். வழியில் மழை சோவென்று கொட்டியது. வியாபாரியும் அவன் சவாரி செய்த குதிரையும் சொட்டச் சொட்ட நனைந்து போனர்கள்.

வழிப் பயணத்தில் தனக்கு இவ்வளவு சிரமம் நேர்ந்ததற்காக ஆண்டவனை அந்த வியாபாரி நிந்தித்தான். ''ஆண்டவனைக் கருணையுடையவன் என்று தெரிந்தவர்கள் சொல்லுகிருர்கள். நானும் என் குதிரையும் மழையால் அவதிப்படுவதைப் பார்த்தால் ஆண்டவனைக் கருணையுடையவன் என்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்று பழித்தான்.

சிறிது நேரத்திற்குப் பின் மழையின் வேகம் சிறிது தணிந்ததே அல்லாமல் ஓய்ந்தபாடாக இல்லை. வியாபாரி செல்ல வேண்டிய காரியமோ அவசரமான காரியம். ஆகவே மழை பெய்வதைப் பொருட்படுத்தாமல் அவன் தொடர்ந்து பிரயாணம் செய்தான்.

வழியில் அடர்ந்த காடு ஒன்று குறுக்கிட்டது. ஒரு திருடன் வியாபாரியை வழிமறித்துத் துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்தினன். ''பணப்பையைக் கொடுத்துவிடு. இல்லையென்ருல் துப்பாக்கியால் உன்னைச் சுட்டுத் தள்ளுவேன்'' என்று சொல்லித் துப்பாக்கியின் விசையை இழுத்தான். துப்பாக்கி சுடவில்லை. பலத்த மழை காரணமாக உள்ளே இருந்த மருந்து பதத்துப் போய்விட்டதால், திருடனல் சுட முடியவில்லை.

விவரம் தெரிய வந்ததும் வியாபாரி மகிழ்ச்சியடைந்தான். குதிரையை முடுக்கிவிட்டுத் திருடனிடமிருந்து தப்பித்துக்கொண்டான். வீட்டை அடைந்ததும் வாயார, மனமார, ஆண்டவனை அந்த வியாபாரி வாழ்த்தினன்.

''மழை பெய்வித்ததற்காக ஆண்டவனைப் பழித்த என் மடமையை என்னவென்று சொல்வது! மழை பெய்ததனல்தான் மருந்து கெட்டுப்போயிற்று. இல்லாவிட்டால், திருடன் என்னைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றிருப்பான். என் பணப்பையையும் அபகரித்துச் சென்றிருப்பான். ஆண்டவன் அளவற்ற கருணையுடையவன் என்பது உண்மைதான். புல்லறிவுடைய மனிதனல் ஆண்டவனுடைய பெருமையையும் ஆற்றலையும் சரிவர அறிய முடியாது; அளக்கவும் முடியாது'' என்று சொல்லித் தன்னைத் தானே அந்த வியாபாரி கடிந்துகொண்டான்.

இராமாயணத்தில் ஒரு காட்சி

சரஸ்வதி

நிகழ்ச்சி மிகவும் சிறியதுதான். ஆனல் இதன்மூலம் ஒரு பெரிய ஆத்ம தத்துவத்தையே அத்தியாத்ம இராமாயணம் புகட்டியிருப்பதைப் பார்க்கிறோம்.


வாலி இராமபிரானல் கொல்லப்பட்டான். அதைக் கண்டதும் வானரங்கள் கலங்கிய நிலையில் கிஷ்கிந்தைக்குத் தாரையிடம் ஓடோடி வந்தன. தாரையைப் பார்த்து அவை, ''தாயே! வானரங்களின் அரசராகிய வாலி போர்க்களத்தில் கொல்லப்பட்டார். இளவரசர் அங்கதனைக் காப்பாற்றுங்கள். அமைச்சர்களையும் தேற்றுங்கள். நாங்கள் நகரத்தைக் காவல் புரிவோம். தாங்கள் அங்கதனை அரசராக்கி விடுங்கள்'' என்று சொல்லி ஓலமிட்டன.

தாரை, வாலியின் மறைவைப் பற்றிய செய்தியைக் கேட்டவுடனே மயங்கி விழுந்தாள். நினைவு திரும்பியதும் தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டாள். ''எனக்கு அங்கதனே ராஜ்யமோ நகரமோ பணமோ எதுவுமே தேவையில்லை. நான் இப்போதே என் கணவரை அடைய வேண்டும். அதன்பொருட்டுத் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே கண்ணீருடன் விரைந்து ஓடினள். கணவனின் உடல் கிடந்த இடத்தை அடைந்தாள். தலைவிரிகோலமாகவும், சோகத்தின் உருவமாகவும் சென்று, குருதியும் புழுதியும் கலந்த உடலையுடைய வாலியைக் கண்டாள். ''ஹே நாதா!'' என்று கதறிக்கொண்டே வாலியின் பாதங்களில் விழுந்து அலறினள்.

இவ்விதம் கல்லையும் உருக்கும் வகையில் புலம்பிக்கொண்டிருந்த தாரையின் பார்வை தற்செயலாக இராமபிரானின் மீது பட்டது. அந்த நிலையில் இராமனைப் பார்த்து அவள் பேசினள்: ''இராமா! எந்த அம்பினல் வாலியைக் கொன்றீர்களோ அதே அம்பினல் என்னையும் கொன்று விடுங்கள். அதனல் உடனே நான் என் ஆருயிர்க் கணவரை அடையக் கூடும். அவரும் என் வரவை ஆவலோடு எதிர் நோக்கியிருப்பார். ஏனென்றல் நான் இல்லாமல் சுவர்க்கத்திலும்கூட அவருக்கு நிம்மதி இருக்காது.

''அண்ணலே! மனைவியைப் பிரிந்த துன்பத்தைத் தாங்களும் அனுபவித்து வருகிறீர்கள். அதனல் மனைவியைப் பிரிவதால் வரும் கொடுமையைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். ஆகவே என்னையும் வாலியின் இருப்பிடத்திற்கு அனுப்பி விடுங்கள். இதனல் தங்களுக்கும் புண்ணியம் உண்டாகும்'' என்றள்.

பிறகு சுக்கிரீவனைப் பார்த்து, ''வாலியைக் கொன்ற இராமன் உனக்கு அரசாட்சியைக் கொடுத்திருக்கிறர். நீயும் எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் ருமாவுடன் இன்பமாக வாழ்ந்து வா'' என்றள்.



இவ்விதம் புலம்பிய தாரைக்கு இராமர் கருணை ததும்பப் பின்வருமாறு தத்துவ உபதேசம் செய்து அமைதிப்படுத்தினர்:

''பெண்ணே! உன் கணவனைக் குறித்து இந்த அளவுக்கு நீ வருத்தப்பட வேண்டிய தேவையே இல்லை. நீ ஏன் அவனைப் பற்றிக் கவலைப்படுகிறய்? உன் கணவன் இந்த உடலா அல்லது உடலில் இருக்கும் ஜீவன என்பதை நன்கு யோசித்துப் பதில் சொல். இந்த உடல்தான் உன் கணவன் என்றல் இது பஞ்சபூதங்களால் ஆனது. தோல், மாமிசம், இரத்தம், எலும்பு ஆகியவற்றினல் ஆனது. காலம், கர்மம், குணங்கள் ஆகியவற்றினல் உண்டானது. அத்தகைய உடல் இங்கேயேதானே இருந்து கொண்டிருக்கிறது? நீ ஏன் வீணக அழுகிறய்?

அல்லது ஜீவன்தான் உன் கணவன் என்று நீ நினைத்தால் நீ வருந்தக்கூடாது. ஏனென்றால் ஆன்மாவுக்கு உருவம் கிடையாது. அது தோன்றுவதும் இல்லை, மறைவதும் இல்லை, ஸ்திரமாக இருக்கிறது என்று மக்கள் நினைப்பது போலவும் இல்லை. அது வருவதும் இல்லை, போவதும் இல்லை. அது எங்கும் நிறைந்தது. அது ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல; ஆண் பெண் என்று சொல்ல முடியாத அலியும் அல்ல. அது ஈடு இணையற்றது. ஆகாயத்தைப்போலவே களங்கமில்லாதது; நித்தியமானது; ஞானமே உருவமானது. பிறகு அதைப் பற்றி ஏன் கவலைப் படவேண்டும்?''

அதைக் கேட்ட தாரை, ''இராமா! உடல் விறகுக்கட்டையைப் போல ஜடமானது; ஆன்மாதான் என்றுமே நிலைத்திருப்பது என்றால் இன்பம் துன்பம் ஆகியவை எதனால் ஏற்படுகின்றன? அதை எனக்குத் தெரிவியுங்கள்'' என்று கேட்டாள்.

அதற்கு இராமர் பதில் சொன்னார்: ''உடலோடும் ஐம்புலன்களோடும் நான் எனது என்னும் தொடர்பு உள்ளவரையில் ஆத்மா, அநாத்மா என்ற விவேகமில்லாத ஜீவனுக்கு இன்ப துன்பங்களை அனுபவிக்கும் இந்த உலகத்துடன் தொடர்பு இருக்கிறது. இந்த உலகம் ஆத்மாவுக்குப் பொய்யான ஒரு தோற்றத்தையே கொடுத்திருக்கிறது. மெய்ஞ்ஞானம் பெறாத நிலையில் உண்மை புலனாகாது. உலகப் பற்று மிக்கவனுக்குக் கனவில் பல வகையான பொருள்கள் தோற்றம் அளிக்கின்றன என்றாலும் அவை யாவும் உண்மை அல்ல.

''ஆரம்பமும் முடிவும் இல்லாதது அறியாமை. அதன் விளைவாக அகங்காரம் முதலியவற்றுடன் தொடர்பு கொண்ட இந்த உலகம் பொய்யாக இருந்தபோதிலும் விருப்பு வெறுப்பு ஆகியவற்றினால் நிறைந்திருக்கிறது.

''பெண்ணே! மனம்தான் உலகம். மனம்தான் பந்தம். அப்படிப்பட்ட மனதுடன் ஆன்மா ஒன்றுபடுவதனால்தான், அதனால் ஏற்படும் இன்பம் துன்பம் ஆகியவற்றின் பிடியில் சிக்கிவிடுகிறது. ஸ்படிகமணி தன் இயற்கையிலேயே நிறம் இல்லாததாக இருந்தாலும், தன் அருகிலுள்ள பொருள்களின் நிறத்தைப் பெற்று அந்த நிறத்தையுடையது போலவே தோற்றமளிக்கிறது. அதுபோலவே புத்தி, ஐம்புலன்கள் ஆகியவற்றின் சேர்க்கையினால் ஆன்மா பலவந்தமாக உலகத்திற்குச் சொந்தமாகிவிட்டதைப் போலவே தோற்றம் அளிக்கிறது. ஆன்மா ஆணாகவோ பெண்ணாகவோ மனதைப் பெற்று அதனால் ஏற்படும் விஷய சுகங்களை அனுபவித்துக்கொண்டு, விருப்பு வெறுப்பு என்ற குணங்களுக்குக் கட்டுப்பட்டுச் செய்வதறியாமல் பந்தங்களாகிய உலகச் சக்கரத்திலே சுழன்றுகொண்டே இருக்கிறது.

''முதலாவதாக, அது விருப்பு வெறுப்பு என்ற மனதின் குணங்களை உருவாக்கிவிடுகிறது. பிறகு, அதன் விளைவாகப் பல வேலைகளையும் செய்கிறது. அவை—1. ஜபம், தியானம் போன்றவை, 2. உயிர்க் கொலையுடன் கூடிய யாகயக்ஞங்கள், 3. மதுபானம் போன்ற பாவ காரியங்கள் என்று மூவகைப்படும். இந்தச் செயல்களுக்கு ஏற்றபடியேதான் அதன் போக்கும் இருக்கும். இவ்விதம் ஜீவன் கர்மத்தின் வசப்பட்டுப் பிரளயகாலம் வரையிலும் வருவதும் போவதுமாகச் சுழன்றுகொண்டே இருந்து வருகிறது. பிரளயகாலத்திலும்கூட (எல்லாப் பூதங்களும் ஒன்றுபட்ட பிறகும்கூட), தான் செய்தது, அனுபவித்தது ஆகியவற்றின் தொடர்பு காரணமாக, அது இடையறாத அறியாமையில் மூழ்கிக் கிடக்கும். திரும்பவும் சிருஷ்டி தொடங்கும்போது மறுபடியும் முற்பிறவிகளின் வினைப்பயனாக அதனோடு தொடர்பு கொண்ட மனதுடன் தோன்றும். எப்போது அதற்கு நல்ல காலம் ஏற்பட்டு என் பக்தனுடனோ அல்லது சாந்த சித்தமுடைய மகாத்மாவுடனோ தொடர்பு ஏற்படுகிறதோ, அப்போது அதன் உள்ளம் என்னிடம் ஈடுபடும். அதன் விளைவாக என் கதையைக் கேட்க வேண்டும் என்ற சிரத்தை ஏற்படும். அப்படிப்பட்ட ஒரு நிலை கிடைப்பது மிகவும் அரிது. என் கதையைக் கேட்பதால் மிகவும் சுலபமாக என் உண்மையான இயல்பைப் பற்றிய ஞானம் ஏற்படும். அப்போது நல்ல குருவின் அருளைப் பெற்று, 'தத் த்வமஸி' போன்ற பேருண்மைகளை அறிகிறது. தன் சொந்த அனுபவத்தினால் எனது இந்த ஸச்சிதானந்த ஸ்வரூபமானதும் ஈடுஇணையற்றதுமான ஆன்மாவைத் தேகம், புலன்கள், மனம், உயிர், அகங்காரம் ஆகியவற்றிலிருந்து தனித்துப் புரிந்துகொண்ட அந்த விநாடியே அது முக்தியடைகிறது.

''ஆகவே, பெண்ணே! நான் உனக்கு அரிய ஒரு பேருண்மையை விளக்கமாகக் கூறிவிட்டேன். விளக்கமாக நான் சொன்ன இந்தப் பரதத்துவ உண்மையை அல்லும் பகலும் தியானம் செய்பவனுக்கு இந்த உலகில் ஏற்படக்கூடிய துன்பம் என்பது அருகில்கூட வராது. எனவே நீயும் சுத்தமான மனதுடன் எனது இந்த உபதேசத்தைப் புரிந்துகொள். அதனுல் இவ்வுலகில் உனக்குக் கஷ்டம் உண்டாகாது. மனக்கிலேசம் அடையமாட்டாய். மேலும், நீ இந்த உலகப் பற்றிலிருந்தும் விடுபடுவாய்.

''தாரையே! நீ முற்பிறவியில் என் பக்தையாக இருந்தாய். ஆகவேதான் உனக்கு முக்தியை அளிக்கும் நோக்கத்துடன் நான் உனக்குத் தரிசனம் தந்தேன். நீ பகலிலும் இரவிலும் என்னேயே நினேத்துக்கொண்டு என் உபதேசங்களேப் படித்துக்கொண்டிரு. அதனுல் ஊழ்வினேப் பயனுக நீ என்ன காரியம் செய்தாலும் அதனுல் நீ பாதிக்கப்படவே மாட்டாய்.''

இராமபிரானின் இந்த உபதேசத்தைக் கேட்ட தாரை பெரிதும் வியப்படைந்தாள். அவளது அஞ்ஞானம் மறைந்தது. சோகத்தை உதறி எறிந்தாள். இராமரை வணங்கி அவருடைய திருவருளேப் பெற்று அந்தக் கணமே ஜீவன்முக்தியைப் பெற்றுள். பகவான் இராமரின் சேர்க்கை கிடைத்த அந்தக் கணமே அவளுக்கு முக்தி கிடைத்துவிட்டது. பாவங்கள் தொலேந்தன. பேரருளேப் பெற்றுவிட்டாள்.

இந்த உண்மைகளேக் கேட்டுக்கொண்டிருந்த சுக்கிரீவனும் மனத்தெளிவைப் பெற்றுன். பிறகு இராமபிரான், சுக்கிரீவனே நோக்கி, ''நீ என் கட்டளேப்படி அங்கதனேக் கொண்டு உன் அண்ணனின் ஈமக்கிரியைகளேச் செய்வி'' என்றுர்.

அதன்படி வாலியின் சவம் மலர்களால் அலங்கரிக்கப்பெற்ற அழகிய விமானத்தில் வைக்கப்பட்டு, எல்லா அரசாங்க மரியாதைகளுடனும் அடக்கம் செய்யப்பெற்றது.

உயர்ந்த பண்புக்கு அடிப்படை சில்லறைத் தியாகங்கள்.

—எமர்சன்


தெய்வத்தை எதிர்த்துச் செல்வம் தேடுதல் தீமை. ஆனுல் தெய்வத்தை நம்பிச் செல்வம் சேர்க்க வேண்டும். இது என் கொள்கை. **—பாரதியார்**

ஜீவனுக்குச் சுதந்திரம் இல்லே. ஆண்டவனேச் சார்ந்திருப்பதே ஜீவனுக்குரிய நிலே. ஜீவன் வாழ்வதும் இயங்குவதும் எல்லாம் இறைவனின் அருளால்தான். **—ஸ்ரீராமானுஜர்**

ஆசையால் உந்தப்பட்ட மனிதர்கள், வேட்டையில் விரட்டப்பட்ட முயலேப் போல் ஓடித் திரிகிறுர்கள். **—புத்தர்**

பங்கியும் புகையிலேயும் அபினியும் கலியுகத்தின் யமதூதர்கள்; ஈசனேயும் அவனே வழிபடும் பக்தி மார்க்கத்தையும் மறந்த மனிதப் பதர்கள் இந்த யமகிங்கரர்களின் விடாப்பிடியில் அகப்பட்டுக் கொள்கின்றனர். **—கபீர்தாசர்**

உன்னுல் ஆற்ற இயலாதது என்று உலகில் ஒன்று உண்டா? உன்னே என்னவென்று நினேத்துக்கொண்டாய்? மாபெரும் ஆற்றல்திரளான இறைவனின் துளி அல்லவா நீ? அளப்பெரும் சோதிப் பெருவெள்ளமாகிய இறைவனிடமிருந்து எழுந்த பொறி அல்லவா நீ? எப்படி நீ ஆற்றல் இல்லாதவனுக இருக்க முடியும்? **—விஞேபா பாவே**





பிரம்மசரியம்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

வீறு பெறுக

சிந்தை யடக்கிச்
சிறுபுலனைக் காத்தடக்கி
விந்தை யடக்கிவளர் வீறு.

வீறு என்பது மனிதன் பெறத்தகும் தெய்விகச் சக்தியாகும்; அதனுல் மனத்திட்பம், வினைத் திட்பம், அழகு, பொலிவு, அறிவு, தெளிவு, ஆற்றல், ஆயுள் எல்லாம் வளரும்.

வீறு என்பதை விந்து, இந்திரியம் என்பர். இதை அடக்கி ஓஜஸ் தேஜஸ் ஆகிய அருட் பொலிவாக்குதலே பிரம்மசரியம் என்பதாகும். விந்தடக்கம் பழகுவோர் இறப்பையும் வென்று நீடு வாழ்வார்.

ப்ரஹ்மசர்யேண தபஸா
தேவா ம்ருத்யும் அபாக்நத

என்பது வேதவாக்கு.

மரணம் பிந்துபாதேந
ஜீவநம் பிந்துதாரணம் |
தஸ்மாத் அதிப்ரயத்நேந
குருதே பிந்துதாரணம் ||

இளைஞர்களே, நன்ருக ஊன்றிக் கவனியுங்கள். விந்தை வீணக்கினுல் சாவுதான்! விந்தை அடக்கினுல் நல்வாழ்வு பெறலாம். ஆதலால் விந்தடக்கத்திற்கு வேண்டிய பயிற்சிகளைச் செய்யுங்கள் என்று அனுபவஞானிகளாகிய முனிவர் வற்புறுத்திச் சொல்லுகிறுர்கள். கீதை ஐந்தாவது அத்தியாயத்தில் கண்ணன் விஜயனுக்குச் சொல்லுகிறுன்: ''விஜயா, விஷய சுக போகங்கள் துக்கத்திலேயே முடியும்; அவற்றிற்கு முடிவு உண்டு; அவை சலிப்புத் தட்டும். எவன் உயிருள்ளபோதே காமக் குரோத வேகங்களை அடக்குகிறுனே அவனே யோகயுக்தன்; அவனே சுகி.''

யமநியம ஒழுக்கம்

யோக தர்சனத்தைப் பாகுபடுத்தியருளிய பதஞ்ஜலி முனிவர் யமநியம ஒழுக்கங்களை முதலில் வற்புறுத்துகிறுர்.

யமமாவது:

1. **அகிம்சை:** இன்ன செய்யாமை, கொல்லாமை. இதனுல் பகை நீங்கும். அன்பு வளரும். அகிம்சா தருமத்தால் மகாத்மா காந்தி நமது நாட்டுக்கு விடுதலை அளித்தார்.

2. **சத்தியம்:** உள்ளத்தால் பொய்யாதொழுகல் உண்மை; வாயால் பொய்யாமை வாய்மை; உடலால் பொய்யாமை மெய்ம்மை ஆகும்.

''பொய்யாமை பொய்யாமை
ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.''

3. **அஸ்தேயம்:** கள்ளாமை, பிறர்பொருளை அவாவாமை. அஸ்தேயத்தால் எல்லா நல்லணிகளும் ஒருவனுக்கு வாய்க்கும்.

''உள்ளத்தால் உள்ளலும்
தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வேன் எனல்.''

திருட்டுச்சொத்து திருட்டுப் போகும்; நிலைக்காது.

4. **பிரம்மசரியம்:** மனதைக் காம உணர்வுகளில் செலுத்தாமல், பிரம்மமாகிய கடவுளுணர்விலேயே உய்த்தல். பொறிபுலன்களை அடக்கியாளுதல். ஆசைத் தினவாலே விந்து வீணுகி ஆற்றலும் ஆயுளும் அழியும். மனத்துக்கண் மாசிலன் ஆதலே அறநெறி ஒழுக்கமாகும்.

பிரம சரியம்
பிழையின்றிப் போற்றின்
அரிய நலமெல்லாம் ஆம்.

5. **அபரிக்ரகம்:** அவாவின்மை; வேண்டாமை; பிறர்பொருளை வவ்வாமை. தூய்மை என்பது அவாவின்மை.

''வேண்டாமையன்ன விழுச்செல்வம்
ஈண்டில்லை''

என்பது வள்ளுவர் வாக்கு.

நியமமாவது:

1. **சௌசம்:** உட்புறத் தூய்மை. தூய்மையும் வாய்மையும் தோழர். புறத்தூய்மை நீராலும் அகத்தூய்மை வாய்மையாலும் வரும். தூய வாழ்வே நோயிலா வாழ்வாகும்.

2. **சந்தோஷம்:** அகமகிழ்வு. மனநிறைவு வாழ்வில் இன்பவெற்றி தரும்.

3. **தவம்:** தூய வாழ்வளிக்கும். தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார். வேண்டியதை எய்துவர்.

4. **ஸ்வாத்யாயம்:** நல்ல நூல்களைக் கற்று நிற்றல். இதனால் அறிவு மலரும். ஒழுக்கம் ஒளிரும்.

5. **ஈசுவரப்ரணிதானம்:** இறை வணக்கம்; இதனால் எல்லா நலனும் எய்தும். கற்ற பயன் கடவுள் வணக்கமே. கடவுள் எண்குணத்தான். மாசறு தூய்மை, வரம்பில் ஆற்றல், முற்றுணர்வு, பேரின்பம், பேரறிவு, சர்வ சுதந்தரம், கட்டின்மை, இயல்பு திரியாமல் இருந்தவாறு இருத்தல்—இவை கடவுளின் எண்குணங்கள்.

இந்த யமநியம ஒழுக்கங்களால் வாழ்வு தூய்மை அடையும். மனம் மாசற்றொளிரும். உள்நாட்டம் உண்டாகும். சொல், மனம், உடல் தூய்மையாகிப் பிரம்மசரியம் சித்திக்கும்.

காந்தி சொன்னது

பிரம்மசரியத்தால் அளவற்ற ஆற்றல் உண்டாகும்; அருட்புலமை மலரும்; உலகில் அரிய காரியங்களைச் சாதித்தவர் அனைவரும் பிரம்மசரியம் காத்தவரே. மகாத்மா காந்தி 1915-இல் மதுரைக்கு வந்தார். அவருடன் கஸ்தூரிபாவும் வந்திருந்தார். நாங்கள் சிலர் அவரைத் தனி முறையிலே சந்தித்தோம்.

நான்: மகாத்மாஜீ, நீங்கள் எப்படிச் சத்தியாக்கிரகச் சக்தி பெற்றீர்கள்? உங்கள் அன்பு, அகிம்சை, புலனடக்கம், பொதுநலத் திறமை, அறிவாற்றல்கள் எப்படி வளர்ந்தன?

மகாத்மா: ஒரே வார்த்தையில் சொல்லுகிறேன்: **பிரம்மசரியம்.** நான் பிரம்மசரிய விரதம் பூண்ட பிறகுதான் ஆளானேன்; அதன் பிறகுதான் அகிம்சையும், சத்தியமும், கருணையும், பொதுநல ஆர்வமும், நெஞ்சுரமும், தெய்வபக்தியும் என்னை ஆட்கொண்டன.

நான்: உங்களுக்கு மனைவி மக்கள் உண்டு. எத்தனையோ பொதுப்பணிகள் செய்கிறீர்கள். இத்தனையும் செய்துகொண்டு எப்படிப் பிரம்மசரியம் காக்கிறீர்கள்?

மகாத்மா: நான் என் மனைவியையும் பிரம்மசரியத்தில் பழக்கிவிட்டேன். இருவரும் ஸ்ரீராமனைச் சரண் புகுந்தோம். என் மனம் ராமனிடம் லயித்திருப்பதனால், அது புறத்தே சென்று விஷயக்குப்பைகளை அள்ளி வருவதில்லை.

நான்: இராமகிருஷ்ண பரமஹம்சர் நம் முன் மலைபோல் நிற்கிறார். அவர் சாரதாதேவியைத் தாமே தேர்ந்தெடுத்தார். அவரது திருமண வாழ்வும் சக்திசாதனமே. சாரதா தம் கணவரின் தெய்வத்தன்மையை அறிந்துணர்ந்தார். [தமிழில் பாடி ஆங்கிலத்தில் விளக்கினேன்.]

''புண்ணியா போற்றி! யோக
  பூரணா னந்தா போற்றி
மண்ணெனப் பொன்னை நீத்த
  மாசிலாத் துறவி போற்றி
பெண்ணினில் அன்னை கண்ட
  பெரியனே, எனது ஞானக்
கண்ணனே போற்றி கண்ணின்
  கதிர்மணி யானாய் போற்றி''

என்று சாரதாசக்தி, சிவமயமான பரமஹம்சரை வணங்கினார். அடக்கரும் புலனை வென்று, கடக்கரும் காமக் கடலைக் கடந்தவர் பரமஹம்சர்.

மகாத்மா: ''இராமகிருஷ்ண பரமஹம்சர் நாம் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத மிகப் பெரிய மகான். அவருடைய நிலை மிகவும் உயர்ந்தது. நமது மனிதநிலையிலிருந்து பிரம்மசரிய விரதத்தைக் காத்து, அதனால் நாம் மேற்கொண்ட பொதுநலக் காரியங்களில் வெற்றி பெறலாம்.

''பிரம்மசரியம் என்பது விந்தடக்கம் மட்டுமன்று; அது மனதை அடக்கி உயர்ந்த ஆதர்சத்தில் உய்ப்பது. மனம் எப்போதும் பிரம்மத்தில் ஈடுபடுவது. என் எளிய நிலையில் நான் எப்போதும் இதயத் துடிப்புடன் **ராம் ராம்** என்று ஜபிக்கிறேன். இதனால் என் மனம் ராமபிரானிடம் லயித்து வருகிறது. அடுத்தபடி ஆகார நியமனம். காம உணர்வைத் தூண்டும் இராஜச உணவுகளை ஒழித்தேன். அதிகப் புளிப்பு, உரப்பு, உப்புச் சேர்ப்பதில்லை. பாலைக் கூட விட்டுவிட்டேன். வேகவைத்த காய்கறி, சப்பாத்தி, கனிகள், கடலை—ஆகியவையே என் உணவு. சாத்துவிக உணவு பிரம்மசரியத்திற்கு வேண்டும். நாக்கு அடங்கினால் இந்திரியப் போக்கு அடங்கும். நாவடக்கத்திற்குச் சாத்துவிக உணவுடன் வாரம் ஒரு நாள் மௌன விரதமும் மேற்கொண்டேன். இப்போது என் மனம் மேல்நோக்கியே செல்லுகிறது.''

மகாத்மாவுக்குப் பிரம்மசரியமும் ராமநாமமுமே சக்தியளித்தன.

நம்பிக்கை விளைவித்த அற்புதம்

D. இராதாகிருஷ்ணன்

இந்தக் கதையிலே ஒரு கொள்ளைக்காரன் வருகிறான். அவனுக்குக் கிடைத்த பாக்கியத்தைத்தான் பாருங்களேன்! இது அருள்நெறிக் கதை மட்டுமல்ல; இலக்கிய நயம் பொதிந்த அற்புதமான கதையும் கூட.

1

நீண்ட காலத்திற்கு முன்பு ஒரு பணக்காரர் இருந்தார். அவர் நல்ல கடவுள் பக்தராகவும் இருந்தார். அவர் தமது வீட்டில் ஸ்ரீமத் பாகவதத்தை விளக்கிச் சொல்வதற்கு ஒரு பண்டிதரை ஏற்பாடு செய்திருந்தார்.

அது வைகாசி மாதம். முழு நிலவு தன் ஒளியை, கைம்மாறு கருதாத சான்றோர்களைப் போல, உலகுக்கு ஆரவாரம் ஒன்றும் இல்லாமல், வாரி வழங்கிக்கொண்டிருந்தது.

பாகவதக் கதையைக் கேட்க வருகிறவர்கள் உட்காருவதற்கு அந்த வீட்டில் நல்ல ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். மல்லிகை, முல்லை, ரோஜா மற்றும் பல வகையான புத்தம் புதிய மலர்களை அங்கு மாலைகளாகத் தொடுத்து அற்புதமாக வைத்திருந்தார்கள். அவற்றின் நறுமணம் எங்கும் பரவி இயல்பாகவே தெய்வத்தை நினைவூட்டுவதாக அமைந்திருந்தது.

அத்துடன் மட்டுமல்லாமல் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளும், மற்றும் திராட்சை, மாதுளை போன்ற பல விதமான பழ வகைகளும் நறுக்கப்பட்டு அழகான தட்டுகளில் வைக்கப்பட்டிருந்தன. வழிபாட்டுக்கு உரிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. பிறகு கண்ணபிரானுக்கு ஆராதனை நடந்தது.

பக்தர்கள் அனைவரும் கூடிக் கண்ணனின் நாமசங்கீர்த்தனத்தில் ஈடுபட்டனர். அது எல்லாத் திசைகளிலும் எதிரொலித்தது.

இரவு வேளையில், நறுமணம் கமழும் மாலைகளுடன் திகழ்ந்த எழில்மிக்க கண்ணனின் தெய்விக விக்கிரகம், பக்தர்களைப் பரவசப் படுத்தியது. கூடியிருந்த மக்கள் தத்தம் நிலை மறந்து, சொற்களால் விளக்க இயலாத தெய்விக இன்பத்தில் தோய்ந்திருந்தனர்.

பாகவதம் சொல்லிக்கொண்டிருந்த பண்டிதர் சாஸ்திரங்களை நன்றாகப் படித்தவர். பாண்டித்தியத்தோடு நல்ல பாடகராகவும் அவர் இருந்தார். ஆகவே இடையிடையே அவர் கண்ணனைப் பற்றிய சுலோகங்களை மிகவும் இனிய குரலில் அற்புதமாகப் பாடினார். 'கண்ணன் எங்கள் கண்ணனும் கார்மேக வண்ணனும்' என்றும், 'கண்ணன் பிறந்தான், காற்று அதைத் திக்கெட்டும் கூறிடுமே!' என்றும் தேவகானம் போலப் பாகவதர் இசைமாரி பொழிந்தார். அவருடைய பாடல்களைக் கேட்ட பக்தர்கள் உலக நினைவுகளை முற்றும் மறந்து சொக்கியிருந்தார்கள்; பகவத் தியானத்திலேயே லயித்திருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் ஒரு கொள்ளைக்காரன் பாகவதம் நடந்துகொண்டிருந்த வீட்டுக்குள்ளே நுழைந்தான்.

மக்களின் கவனமெல்லாம் பாகவதத்திலே; திருடனின் கவனமெல்லாம் கொள்ளையடிப் பதிலே. பக்தர்களின் கவனம் பாகவதத்தில் இருந்ததனால், திருடன் அந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளையடிக்க நினைத்தான். அவன் விலையுயர்ந்த ஆபரணங்களை அந்தப் பணக்காரரின் வீடு முழுவதும் தேடினான். ஆனால், கண்ணனின் லீலையைத்தான் என்னவென்று சொல்வது! கொள்ளைக்காரன் தேடிய பொருள் ஒன்றுகூட அவன் கைக்கு அகப்படவில்லை! கொள்ளைக்காரன் மிகவும் சோர்ந்து போனான். அந்த நிலையில் பாகவதம் நடந்துகொண்டிருந்த இடத்திலே சென்று அவன் உட்கார்ந்தான்.


பண்டிதர் பாகவதத்தை மிகவும் உற்சாகமாக உரத்த குரலில் பின்வருமாறு சொல்லிக் கொண்டிருந்தார்:—

''விடியற்காலை நேரம். அப்போது கோகுலத்தின் அழகிய காட்சியைத்தான் என்னென்பது! மரங்களின் இலைகள் சலசலத்தன. 'எங்கள் கோகுலத்தின் தலைவன் கண்ணன் இதோ வந்து

எங்களை இன்பக்கடலில் திளைக்கச் செய்யப் போகிறான்' என்று அறிவிப்பது போலவே பல வகையான பறவைகளின் குரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

''அதே சமயம், 'கண்ணன் எங்களை அழைத்துச் செல்ல வந்துவிட்டானா?' என்று ஆர்வத்துடன் பசுக்களும் கன்றுகளும் மன்னன் நந்தனின் மாளிகையை நோக்கி அடிக்கடி தலை தூக்கிப் பார்த்துக் குரல் கொடுக்கின்றன.

''கண்ணனின் விளையாட்டுத் தோழர்களாகிய ஸ்ரீதாமன், சுதாமன், வசுதாமன் ஆகிய ஆயர்சிறுவர்கள் பள்ளியறைக்கு வெளியில் நின்று கண்ணனையும் பலராமனையும், 'பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்;



புன்மை இருட்கணம் போயின யாவும்; எம தருமைக் கண்ணா, எழுந்திரு, விழித்திரு. இன்னும் ஏன் உறக்கம்? வெளியே வந்துதான் பாரேன். உன்னைக் காணாமல் பசுக்களும் கன்றுகளும் சப்தமிட்டுக்கொண்டு இருக்கின்றன. நாங்கள் எவ்வளவு நேரமாக உனக்காகக் காத்திருக்கிறோம்? உடனே புறப்படு; காட்டுக்குப் போவோம். கன்று மாடுகளை மேய்த்து வருவோம். அண்ணா பலராமா, நீயுமா தூங்குவது? எழுந்திரு, சீக்கிரம் எழுந்திரு' என்று ஆயர் சிறுவர்கள் தம் கிள்ளைமொழிகளால் கிருஷ்ணனையும் பலராமனையும் எழுப்புவதைத் தாய் யசோதை கேட்டாள்.

''உடனே அவள் தன் மக்கட்செல்வங்களை, 'கண்ணா, பலராமா, தூங்கியது போதும்; எழுந்திருங்கள். உங்களுக்காகப் புதிய வெண்ணெயைக் கடைந்து வைத்திருக்கிறேன். இனிய தின்பண்டங்களை எடுத்து வைத்திருக்கிறேன். என் செல்வங்களே! எழுந்திருங்கள். நீராடிச் சாப்பிட்டு முடித்துக் கால்நடைகளை ஓட்டிக் கொண்டு கானகத்துக்குச் செல்லுங்கள்' என்று சொல்லி எழுப்பினாள்.

''பிறகு யசோதை தன் குழந்தைகளை நீராட்டினாள். அவர்களுக்கு வெண்ணெயையும் பாலாடைக் கட்டியையும் பல தின்பண்டங்களையும் உண்ணக் கொடுத்தாள். அவர்களுக்குப் பட்டாடைகளை உடுத்துவிட்டாள். அதோடு, பல இலட்சம் ரூபாய் மதிப்புப் பெறும், கண்களைப் பறிக்கும், வைர நகைகளைக் கிருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் அணிவித்து உச்சி மோந்தாள். பிறகு அவர்களை மாடு மேய்க்கக் காட்டுக்கு அனுப்பி வைத்தாள்'' என்று பண்டிதர் பாகவதம் சொல்வதைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

2

அதுவரையிலும் பண்டிதர் சொன்னதைக் கொள்ளைக்காரன் கவனமாகக் கேட்டான். மேற்கொண்டு பண்டிதர் சொன்ன எந்த விஷயமும் அவன் காதில் ஏறவில்லை. ''ஆகா! எப்படிப்பட்ட அருமையான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கிறது! அதிர்ஷ்டமென்றால் இது அல்லவா அதிர்ஷ்டம்? பண்டிதர் சொன்ன கண்ணன் பலராமன் என்பவர்களோ சிறு பையன்கள்; அவர்கள் அணிந்திருப்பவையோ பல இலட்சம் மதிப்புப் பெறும் வைர நகைகள். தனியாக வேறு அவர்கள் காட்டிலே போகிறார்களாம். இரண்டு அறை கன்னத்தில் விட்டால் போதும்; அவ்வளவு நகைகளையும் பேசாமல் கழற்றி வைத்துவிடுவார்கள். ஏராளமான செல்வம் மிகவும் சுலபமாகக் கிடைக்கும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை நான் நழுவவிடக் கூடாது; விடவும் மாட்டேன்'' என்று கொள்ளைக்காரன் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.


பிறகு அவன் பணக்காரரின் வீட்டைவிட்டு வெளியே வந்தான். 'பண்டிதர் கதை சொல்வது முடியட்டும்' என்று காத்திருந்தான்.

பாகவதர் சொன்ன இரண்டு பையன்கள்! கண்ணன், பலராமன் ஆகியோரின் தோற்றம்! அவர்கள் அங்கங்களிலே அணிந்து கொண்டிருக்கும் அந்த நகைகளின் ஜொலிஜொலிப்பு!

இவை மட்டுமே கொள்ளைக்காரனின் மனதில் ஆழ்ந்து பதிந்துவிட்டன.

'அந்தச் சின்னஞ்சிறிய பையன்கள் அணிந்திருக்கும் விலையுயர்ந்த நகைகளை மட்டும் நான் கொள்ளையடித்து வந்துவிட்டால்? ஆகா! என்னைவிடப் பணக்காரன் இந்த உலகில் யார் இருக்க முடியும்? கிருஷ்ணன், பலராமன், வைரங்கள்!' என்றே அந்தக் கொள்ளைக்காரன் சிந்தித்துக்கொண்டிருந்தான். நகைகளைப் பற்றிய சிந்தனைகளோடு, ஸ்ரீகிருஷ்ணன் பலராமன் ஆகியோரின் பகவத் சிந்தனையும் அவனது உள்ளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஏற ஆரம்பித்தது. ஒருவிதத் தெய்விக நிலையில் திளைக்கத் துவங்கினான்.

திடீரென்று நாமசங்கீர்த்தனம் முழங்கியது. அத்துடன் கொள்ளைக்காரனின் சிந்தனையும்



கலந்தது. பக்தர் கூட்டம் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு வெளியே வர ஆரம்பித்தது.

கொள்ளைக்காரன் பாகவதரை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவர் பரிசுப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு, தமக்காக ஏற்பாடு செய்திருந்த வீட்டுக்குச் செல்லத் தனியாக வெளியே வந்தார். கொள்ளைக்காரன் அவரைத் தொடர்ந்தான்.

பாகவதர், மரங்கள் அடர்ந்த பகுதி வழியாகத் தனிமையில் சென்றுகொண்டிருந்தார். அப்போது கொள்ளைக்காரன், ''ஏ பாகவதரே! அங்கேயே நில். ஓரடியும் மேலே எடுத்து வைக்காதே!'' என்று கடுகடுக்க முரட்டுக் குரலில் அதட்டினான்.

தனிமையில் கொள்ளைக்காரனிடம் அகப்பட்டுக்கொண்ட பாகவதரிடம், அப்போதுதான் அவர் தக்ஷிணையாகப் பெற்று வந்த பணம் கொஞ்சம் இருந்தது. குரல் கேட்டதுமே அவருக்குக் கை கால் வெலவெலத்துவிட்டது. ஓடத் தொடங்கினார். அதைக் கண்டதுமே கொள்ளைக்காரன் மேலும் முரட்டுக் குரலில் இடியாக முழங்கினான்: ''ஓய் பாகவதரே! ஓடாதே! ஓடினால் தப்பித்துக் கொண்டு விடலாம் என்ற நினைப்பா?''

பாகவதருக்குப் பாதி உயிர் போய்விட்டது. வேறு வழி இல்லாத நிலையில் மரம் போல அசையாமல் நின்றுவிட்டார்.

கொள்ளைக்காரன் நெருங்கினான். ''பாகவதரே, நீ ஏதோ பல இலட்சம் பெறுமான நகைகளைப் போட்டிருக்கும் பையன்களைப் பற்றிச் சொன்னாயே; அவர்களின் வீடு எங்கே இருக்கிறது? அவர்கள் இருவரும் மாடுமேய்க்க எந்தக் காட்டுக்குப் போகிறார்கள்? ஒன்றையும் மறைக்காமல் உடனே சொல்லிவிடு. எதையாவது மூடி மறைத்தாயோ, என் கையில் இருக்கிற இந்தக் கத்தி உன் குடலை வெளியே கொண்டு வந்துவிடும்! ஜாக்கிரதை!'' என்று கேட்டு மிரட்டினான்.

பாகவதர் பார்த்தார். அரக்கனைப் போலத் தோற்றமளித்தாலும், இந்தக் கொள்ளைக்காரன் வடிகட்டிய முட்டாள் என்பதைப் புரிந்துகொண்டார். ஆகவே சற்றுத் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு, ''அந்தப் பையன்களிடம் உனக்கு என்ன வேலை?'' என்று கேட்டார். ''இருக்கிறது, வேலை இருக்கிறது'' என்று இடி இடித்தாற்போலக் கொள்ளைக்காரனிடமிருந்து பதில் வந்தது.

''என்ன வேலை என்றுதான் சொல்லேன்'' என்றார் பாகவதர்.

கொள்ளைக்காரன் சொன்னான்: ''பாகவதரே, நான் பக்காக் கொள்ளைக்காரன். நீ சொன்ன அந்தப் பையன்களுடைய நகைகளைக் கொள்ளையடிக்கப் போகிறேன். அந்த நகைகள் மட்டும் என் கைக்கு வந்துவிட்டால், உனக்கும் அதில் பங்கு தருகிறேன். என்னை ஏமாற்றப் பார்த்தாயோ, நான் பேச மாட்டேன்; இந்தக் கத்திதான் பேசும். பார்த்துக்கொள்!'' என்று கத்தியைத் தூக்கி ஆட்டினான்.

இந்த அடிமுட்டாளிடமிருந்து தப்புவது சுலபம் என்ற எண்ணத்துடன் பாகவதர், ''அதற்கு என்ன ஆட்சேபம்? தாராளமாகச் சொல்கிறேன். ஆனால் நீ கேட்கும் விவரங்கள்

அடங்கிய புத்தகம் நான் தங்கியிருக்கும் வீட்டில் அல்லவா இருக்கிறது? நீ என்னோடு வீட்டுக்கு வந்தால் புத்தகத்தைப் பார்த்து எல்லா விவரங்களையும் சரியாகச் சொல்லிவிடுவேன்'' என்றார். கொள்ளைக்காரனையும் அழைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

ஜாகையை அடைந்ததும் பாகவதர் யாரிடமும் விவரம் ஏதும் சொல்லவில்லை. புத்தகத்தை எடுத்துப் பிரித்தார். கொள்ளைக்காரனுக்குப் பகவான் ஸ்ரீகிருஷ்ணன், பலராமன் ஆகியோரின் அற்புதத் தோற்ற அழகை வர்ணிக்கத் தொடங்கினார்:

''ஸ்ரீகிருஷ்ணனும் பலராமனும் தங்கள் கால்களில் பொன்னாலான வீரக்கழல்களை அணிந்திருக்கிறார்கள். அவற்றின் 'கலீர் கலீர்' என்ற ஒலி, கேட்பவர்களின் உள்ளங்களை அப்படியே மயங்கச் செய்கிறது. நீலநிறமுள்ள கண்ணன் மஞ்சள்நிற ஆடையை அணிந்திருக்கிறான். பொன்மேனி படைத்த பலராமன் நீலநிற ஆடையைத் தரித்திருக்கிறான். இருவரும் இடுப்பில் ஒட்டியாணங்கள் அணிந்திருக்கிறார்கள். அந்த ஒட்டியாணங்களில் விலைமதிப்பற்ற முத்துக்களும் வைரங்களும் மாணிக்கக் கற்களும் பதித்திருப்பதால், தகதகவென்று பிரகாசிக்கின்றன. அது மட்டுமா? கண்களைக் கூசச் செய்யும் வகையில் மின்னிக்கொண்டிருக்கும் நவரத்தின மாலைகளையும் அவர்கள் கழுத்தில் அணிந்திருக்கிறார்கள். மார்பில் கௌஸ்துப மணி 'டால்' அடிக்கிறது. இதைப் போன்ற மணியை இந்த உலகில் வேறு எங்குமே பார்க்க முடியாது. மணிக்கட்டுகளில் நவரத்தினங்கள் பதித்த கங்கணங்கள் உள்ளன. காதுகளில் மகர குண்டலங்களை அணிந்திருக்கிறார்கள். தலையிலே, பார்ப்பவர்களின் மனதை அப்படியே கவர்ந்திழுக்கும் சூடாமணி தன் ஒளியை உமிழ்ந்தபடி உள்ளது. சுருண்ட கருகருத்த அழகிய கேசம்; நெற்றியில் கஸ்தூரி திலகம்; உதடுகளில் புன்சிரிப்புத் தவழ்கிறது. ஸ்ரீகிருஷ்ணன் தன் திருக்கரங்களில் பொன்னாலான புல்லாங்குழலை வைத்திருக்கிறான். அதை அவனுடைய அழகிய உதடுகள் தொட்டுக்கொண்டிருக்கின்றன. அவனுடைய அந்தத் தெய்விகத் திருமேனியின் காந்தியின் முன்பு ஆயிரம்கோடி சூரியர் ஒளியிழந்து காணப்படுகின்றனர். பலவித வண்ண மலர்களாலாகிய மாலை அவன் கழுத்தை அலங்கரிக்கிறது. அவனுடைய கூரிய மூக்கு, கிளி போல் சற்று வளைந்திருக்கிறது. மல்லிகை மொட்டுப் போன்ற ஒளிபடைத்த பற்கள். ஆகா! அவனுடைய வடிவத்தின் அழகைத்தான் என்னவென்று விளக்கிச் சொல்ல முடியும்?

''ஸ்ரீகிருஷ்ணன் தன் புல்லாங்குழலில், 'ராதே, ராதே, ராதே' என்று மட்டும் அழைக்கத் தொடங்கிவிட்டால், ஆயிரம் மைல்களுக்கும் அப்பால் குகைகளில் சமாதியில் ஆழ்ந்திருக்கும் யோகீசுவரர்களும்கூட, தம் சமாதியிலிருந்து விடுபட்டு அதைக் கேட்பதற்காக ஓடோடியும் வந்துவிடுவார்கள்! யமுனை நதிக்கரையிலுள்ள விருந்தாவனத்தின் புன்னை மரத்தடியில்தான் அவனைப் பெரும்பாலும் பார்க்க முடியும். வனமாலி கிருஷ்ணனும் ஹலதாரி பலராமனும் இணைந்தே அங்குக் காணப்படுவார்கள்!'' என்று பாகவதர் கொள்ளைக்காரனுக்கு விளக்கிக்கொண்டு போனார்.



கொள்ளைக்காரன் குறுக்கிட்டுக் கேட்டான்: ''நல்லது பாகவதரே, எல்லா நகைகளுமாகச் சேர்ந்து எவ்வளவு ரூபாய் மதிப்பு இருக்கும்?''

பாகவதர்: கோடி பலகோடி; கணக்கிடவே முடியாத பலகோடி ரூபாய் மதிப்பு இருக்கும். உதாரணமாக, ஒரு கௌஸ்துப மணியையே எடுத்துக் கொள்ளேன். அதன் மதிப்புக்கு ஈடாக உலகிலுள்ள அத்தனை செல்வங்களை வைத்தாலும் போதாது.

கொள்ளைக்காரன்: அடி சக்கை! சொல்லு ஐயா, அந்தக் கௌஸ்துப மணி எப்படி இருக்கும்?

பாகவதர்: அந்த மணி எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதோ அங்கே சூரியன் போன்ற ஜோதி பிரகாசிக்கும். இருள் என்பதே காணப்படாது. அந்த மாதிரி இரத்தினம் உலகில் வேறு எங்குமே கிடையாது.

கொள்ளைக்காரன்: அப்படியானால் அதன் விலை அதிகமாகத்தான் இருக்கும். சரி, மறுபடி

யும் ஒருமுறை எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல். நான் இன்னும் தெளிவாக மனதில் பதிய வைத்துக்கொள்கிறேன்.

பாகவதர் ஒரு முறைக்கு இரண்டு முறையாக ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் வடிவத்தை வர்ணித்தார். கொள்ளைக்காரன் கண்களை மூடி அந்த உருவ அழகை மனதில் நன்றாகப் பதிய வைத்துக்கொண்டான்.

கொள்ளைக்காரன்: பாகவதரே, முக்கியமானதைக் கேட்க மறந்துவிட்டேனே! நான் அந்தப் பையனைப் பார்ப்பதானால் எந்தத் திசையிலே போக வேண்டும்? அதை முதலில் சொல். நான் கொள்ளையடித்து வருவதில் உனக்கும் பங்கு தருகிறேன்.

பாகவதர், ''நேராக வடக்கே போ. ஒரு காடு. ஒரு புன்னைமரம், சிறிய ஒரு குன்று. பொழுது விடியும் நேரம். மறக்காதே, ஆமாம்!'' என்றார்.

3

கொள்ளைக்காரன் பாகவதரை வணங்கினான். பிறகு வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல விறுவிறுவென்று வடக்கு நோக்கி விரைந்தான்.

கொள்ளைக்காரன் சென்ற பிறகு பாகவதர் விழுந்து விழுந்து சிரித்தார். 'இவன் முட்டாள்களிலும் வடிகட்டிய முதல்தரமான முட்டாள்! கண்ணனைக் காணப் போகிறானும்! கௌஸ்துப மணியைக் கொள்ளையடிக்கப் போகிறானும்!'

ஆனால் அவருடைய சிரிப்பு மறுகணமே கவலையாக மாறிவிட்டது. 'நாலைந்து நாட்கள் அலைந்து திரிந்து, கடைசியில், 'நீ சொன்னபடி ஒன்றும் காணேமே!' என்று அவன் திரும்ப வந்து உதைத்தால்? ஹாங்! வரட்டுமே! எதைச் சொன்னாலும் நம்பும் அசடன்தானே அவன்? இன்னொரு திசையைக் காட்டிவிடுகிறேன். அதற்குள் இங்கே கதாகாலட்சேபத்தை முடித்துக்கொண்டு ஊருக்கே போய்விடுவேன்' என்று தமக்குத் தாமே பாகவதர் சமாதானப் படுத்திக்கொண்டார்.

கொள்ளைக்காரன் உணவை மறந்தான்; உறக்கத்தை மறந்தான். அவனுடைய உள்ளத்தில், ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த இரண்டு பையன்களே இரவும் பகலும் நிறைந்திருந்தார்கள். அந்த நகைகளை எப்படிக் கொள்ளையடிப்பது என்ற ஒரே சிந்தனை. போவது வடக்கா தெற்கா? திசையும் தெரியாது. போகிறான், போகிறான், போய்க் கொண்டே இருக்கிறான். மனிதர்களின் சிரிப்போ அழகோ அவன் மனதைத் தொடவில்லை. பறவைகளின் இனிய கீதம் காதில் விழவில்லை. மலைகள், நதிகள், காடுகள் எவையுமே அவன் கண்ணுக்குப் புலனாகவில்லை. கல்லும் முள்ளும் காலை உறுத்துவதை உணரவில்லை. புன்னைமரம்; அதன் அடியில் புல்லாங்குழலூதும் கண்ணன்! அவனது தெய்விக ஆபரணங்கள்! இந்தச் சிந்தனைகளின் மயமாகவே கொள்ளைக்காரன் மாறிப்போயிருந்தான்.

வழியில் இதோ ஓர் இடம். கொள்ளைக்காரன் கூர்ந்து கவனித்தான். 'ஆம், பாகவதர் சொன்ன அதே வனம்! சலசலவென்று பாய்ந்தோடும் ஆறு இதோ இருக்கிறது! சிறிய குன்று இருக்கிறது! ஆனால் புன்னைமரம் எங்கே?' தேடினான். 'இதோ புன்னைமரம்; கண்டுபிடித்துவிட்டேன்! கண்டுபிடித்துவிட்டேன்!' ஆடினான், ஆடினான், ஆனந்தக் கூத்தாடினான்.

'எங்கு ஒளிந்துகொண்டால் கண்ணனும் பலராமனும் வருவதைப் பார்க்க முடியும்? எங்கே பதுங்குவது? எப்படிக் குதிப்பது? எப்படி அவர்களின் நகைகளைப் பறிக்கலாம்?' கொள்ளைக்காரன் பல முறையும் ஒத்திகை பார்த்துக் கொண்டான். சூரியன் அந்தக் கொள்ளைக்காரனின் தவிப்பைக் கண்டு பயந்துதானோ என்னவோ, தன் பொற்கிரணங்களைச் சுருட்டிக் கொண்டு மலைமுகட்டில் மறைந்துவிட்டான்.

கொள்ளைக்காரனுக்கு அன்றைய இரவு மிகவும் நீண்டுகொண்டு போவதாகப் பட்டது. கண்ணனின் வரவு; திவ்யாபரணங்களைக் கொள்ளையடிப்பது—இதே எண்ணம்.

நேரம் ஆக ஆகத் துடிதுடிப்பு, பரபரப்பு, வேதனை, கண்ணனைக் காண வேண்டும் என்பதில் கொள்ளைக்காரனுக்கு முறுகியது.

'பாகவதர் அந்தக் கௌஸ்துபமணியின் ஒளியில் சூரியனின் ஒளியும் மழுங்கிவிடும் என்று சொன்னாரே! அந்த மணியின் ஒளியால் நான் இந்தக் கிளையில் இருப்பதைக் கண்டு அந்தப் பையன்கள் ஓட்டம் பிடித்துவிட்டால்? இல்லை, மரத்தின் உச்சியில் போய் ஒளிந்திருப்பேன். கூடாது, நான் இறங்கி வருவதற்குள் ஓடி

விட்டால்? ஊகும்! கீழே உள்ள புதர்களில் ஒளிந்திருப்பேன். வந்ததும் திடீரென்று பாய்ந்து பிடித்துக்கொண்டுவிடலாம்' — இவ் விதம் எண்ணி எண்ணிக் கொள்ளைக்காரன் மரத்தில் ஏறுவதும் புதரில் மறைந்திருப்பது மாக அலைபாய்ந்தான்.

புல்லாங்குழலின் இனிய நாதம் கேட்கிறதா என்று செவியிலேயே சிந்தனை அனைத்தையும் செலுத்திக் கேட்டான். 'பொழுது விடியப் போகிறது. கண்ணன் வரப்போகிறான். இதோ நான் பாய்ந்து அவனைக் கட்டிப்பிடிக்கப் போகி றேன். அவன் அணிந்துள்ள நகைகளையெல் லாம் தட்டிப் பறித்துவிடுவேன்' — இந்த ஒரு சிந்தனையைத் தவிரக் கொள்ளைக்காரனின் மனதில் வேறு ஒன்றுமே இடம் பெறவில்லை. பார்த்துக்கொண்டிருக்கும்போதே யாரோ வருவது போலத் தெரிந்தது! கொள்ளைக்கார னின் இதயத் துடிப்பு அதிகமாகியது. மரத்தி லிருந்து தரைக்குக் குதித்தான். ஆனால் புல்லாங்குழலின் நாதம் கேட்கவில்லையே!

திரும்பவும் மரத்தில் ஏறினான். காதைத் தீட்டிக்கொண்டு கூர்ந்து கவனித்துக் கேட் டான். புல்லாங்குழல் சப்தம் கேட்கவில்லை! அவனுக்கு இதயமே வெடித்துவிடும் போல இருந்தது. 'ஒருவேளை இது என் மனதில் ஏற் பட்ட பிரமையாக இருக்குமோ?' மீண்டும் உச்சிக்கிளையில் ஏறிக்கொண்டான். அதோ சப்தம் கேட்கிறது! ஆம், அது புல்லாங்குழலின் நாதமேதான்! வரவர அந்தச் சப்தம் அருகில் ஒலிக்கிறது. கொள்ளைக்காரனின் மனம் உணர்ச்சிப் பரவசத்தில் பொங்கித் ததும்பியது. அந்த மகிழ்ச்சியின் வேகத்தை அவனால் தாங்க முடியவில்லை. மயங்கினான்; மூர்ச்சித்துத் தரை யில் வீழ்ந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு மூர்ச்சை தெளிந்தது. கண்கள் திறந்தன; எழுந் தான்; கண்களை அகல விரித்துப் பார்த்தான்.

அதோ அதோ, அந்தக் காட்டுப் பாதையில் இரண்டு தேஜோமயமான பையன்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். புவனம் அனைத்தையும் மயங்க வைக்கும் பேரழகின் பிம்பங்களாக அல்லவா திகழ்கிறார்கள்? அந்தப் பேரொளிப் பிழம்பின் முன்னால், அடர்ந்த இந்தக் காட்டின் அந்தகாரமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டதே! ஆயர்சிறுவர்களும் மாடு களும் முன்னே சென்றுவிட்டார்கள்.

கொள்ளைக்காரன், ஸ்ரீகிருஷ்ணனும் பல ராமனும் வந்துகொண்டிருப்பதைப் பார்த் தான். அவர்களின் அழகுக்கு வசப்பட்டவனாகக் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டே நின்றுவிட்டான். அவனது வாய் மூடியது; மனம் திறந்தது: 'ஆகா! என்ன அழகிய முகங்கள்! கண்கள் அமுத மழையை அல்லவா பொழி கின்றன? இவர்கள் உடல் முழுவதும் விலை மதிப்பிட முடியாத ஆபரணங்கள் அல்லவா ஜொலிக்கின்றன? ஐயோ, இவர்களைப் பெற்ற அந்தத் தாய்க்கும் தந்தைக்கும் இவர்களை மாடு மேய்க்க அனுப்ப எப்படித்தான் மனம் வந் ததோ? இவர்களுடைய முகங்களைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றல்லவா என் மனம் விரும்புகிறது? சே, இது என்ன கோழைத்தனம்! நானோ கொள்ளைக்காரன். இவர்களின் நகைகளைக் கொள்ளையடிக்க வேண்டும் என்றல்லவா இங்கே வந்தேன்? அடிப்பது கொள்ளை; காட்டுவது தயை! பொருந்தாது, இது எனக்குப் பொருந்தாது' என்று நினைத்துக்கொண்டே ஸ்ரீகிருஷ்ணனையும் பலராமனையும் நோக்கி ஓடினான்.

அவர்களின் முகத்தை அவன் பார்த்தான். மயங்கித் தள்ளாடி வீழ்ந்தான். மீண்டும் எழுந்து நின்றான். அவன் கண்களில் தன்னை அறியாமல் நீர் வழிந்தோடியது. துடைத்துக் கொண்டான். மீண்டும் பழைய உணர்வு தலையெடுத்தது. ஓர் அதட்டல் போட்டான்: ''போகாதே, நில்! எல்லா நகைகளையும் அங்கேயே கழற்றிக் கீழே வை!''

ஸ்ரீகிருஷ்ணன்: (பயந்துகொண்டே) நாங்கள் எங்களுடைய நகைகளை உனக்கு எதற்குத் தர வேண்டும்?

கொள்ளைக்காரன்: கொடுக்க மாட்டாயா? என் கையில் என்ன இருக்கிறது பார்த்துக் கொள். (கத்தியைத் தூக்கிப் பிடிக்கிறான்.)

ஸ்ரீகிருஷ்ணன்: கத்தியைக் கொண்டு என்ன செய்வாய்?

கொள்ளைக்காரன்: நகையைத் தராவிட் டால் குத்திக் குடலை வெளியே எடுத்துவிடு வேன்.

ஸ்ரீகிருஷ்ணன்: இல்லை, நாங்கள் எங்கள் நகைகளைத் தர மாட்டோம்.

கொள்ளைக்காரன்: அப்படியா விஷயம்? இதோ இப்போதே உங்கள் காதுகளைப் பிடித்துத் திருகி நகைகளைப் பறித்துக்கொண்டு உங்களையும் இந்த ஆற்றில் தூக்கி எறிந்துவிடுகிறேன்.

ஸ்ரீகிருஷ்ணன்: ஐயோ அப்பா, திருடன்! திருடன்! (கூச்சலிடுகிறார்.)

கொள்ளைக்காரன் பாய்ந்து தன் கையினால் கிருஷ்ணனின் வாயை மூட முயல்கிறான். என்ன ஆச்சரியம்! கிருஷ்ணனைத் தீண்டியவுடனே அவன் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்தது போல ஆகிவிடுகிறது. மயக்கமுற்றுத் தரையில் வீழ்கிறான். மீண்டும் எழுந்து, ''பிள்ளைகளே,



நீங்கள் யார்? உங்களைப் பார்க்கப் பார்க்க மிகவும் அழகாக என் கண்களுக்குத் தோன்றுகிறீர்கள். என் இமைகள் மூட மறுக்கின்றன. ஐயோ, இது என்ன? என் கண்களிலிருந்து நீர் பெருகுகிறதே! என் உடல் மயிர்க்கூச்செறிகிறது! தெரிந்து கொண்டேன், தெரிந்து கொண்டேன்! நீங்கள் இருவரும் தேவர்களேதான், மனிதர்கள் அல்ல!'' என்று கூவினான்.

ஸ்ரீகிருஷ்ணன் புன்முறுவலுடன், ''இல்லை ஐயா, நாங்கள் மனிதர்கள்; ஆயர்சிறுவர்கள். நாங்கள் கோகுலத்தின் அரசராகிய நந்தனின் பிள்ளைகள்'' என்றான்.

கொள்ளைக்காரன் சொன்னான்: ''என்ன அற்புதமான புன்சிரிப்பு! பிள்ளைகளே, நீங்கள் போகலாம். போங்கள், நீங்கள் உங்களுடைய மாடுகளை மேய்க்கப் போங்கள். எனக்கு உங்கள் நகைகளே வேண்டாம். உங்கள் திருவடிகளை மட்டும் என் தலையில் ஒரு முறை வையுங்கள். அது போதும் எனக்கு. எங்கே, உங்கள் அழகான கைகளைக் கொஞ்சம் நீட்டுங்கள். ஆகா! உங்களைத் தீண்டியதனால் என் உடல், உள்ளம், ஆத்மா அனைத்துமே ஆனந்தத்தால் நிரம்பிவிட்டன. வேறு எங்குமே போவதற்கு எனக்கு இப்போது விருப்பமில்லை. பிள்ளைகளே, இங்கேயே நின்றுகொண்டிருக்கிறேன். வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறேன். காலையும் மாலையும் மட்டும் உங்கள் தரிசனத்தை ஒரு முறை எனக்குத் தந்துவிட்டுப் போவதை வழக்கமாகக் கொள்ளுங்கள். அதுவே போதும். வேறொன்றுமே வேண்டாம். பிள்ளைகளே, என் அருமைக் கண்மணிகளே, ஒன்றுமட்டும் சொல்கிறேன்: உங்கள் தரிசனத்தை ஒரு நாள் நீங்கள் தராமற் போனால், துடிதுடித்து உயிரையே நான் விட்டுவிடுவேன்!''

ஸ்ரீகிருஷ்ணன்: இப்போது நீ எங்களைக் கொல்லமாட்டாயே? நகைகளைப் பறித்துக் கொள்ள மாட்டாயே? அப்படிச் சத்தியம் செய்து கொடுத்தால்தான் நாங்கள் தினந்தோறும் உன்னைப் பார்க்க இங்கே வருவோம்.

கொள்ளைக்காரன்: ஒரு தரம் என்ன? நூறாயிரம் தடவை வேண்டுமானாலும் சத்தியம் செய்து தருகிறேன். நான் உங்களை ஒருகாலும் கொல்ல மாட்டேன். உங்களை யாரால்தான் கொல்ல முடியும்? உங்களைக் கொல்ல வேண்டுமென்று ஒருவன் நினைத்தாலே அவன் ஆற்றல் அனைத்தும் மறைந்து போய்விடும்.

ஸ்ரீகிருஷ்ணன்: நாங்கள் எங்கள் நகைகளைக் கொடுத்தால் நீ வாங்கிக்கொள்வாயா?

கொள்ளைக்காரன்: நகைகளா? நகைகள் எதற்கு? இப்போது எதையும் வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆசையே எனக்கு இல்லை.

ஸ்ரீகிருஷ்ணன்: ஏன்? நாங்களே கொடுக்கிறோம். வாங்கிக்கொள்.

கொள்ளைக்காரன்: நீயே கொடுக்கிறாயா? எனக்கா? அப்படியென்றால் வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் உங்கள் அப்பா அம்மா கோபித்துக்கொண்டால்? உங்களை அடித்தால்?

ஸ்ரீகிருஷ்ணன்: இல்லை, நாங்கள் அரசகுமாரர்கள். எங்களிடம் இதைப்போல ஏராளமான நகைகள் இருக்கின்றன. உனக்கு வேண்டுமென்றால் இன்னும் கொண்டு வந்து கொடுக்கிறோம்.

கொள்ளைக்காரன்: ஊகூம். நான் நகைகளை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறேன்? ஆனால் நீ கொடுப்பதை வேண்டா

மென்றும் சொல்லக்கூடாது. உண்மையைச் சொல், உன்னிடம் இன்னும் நகைகள் இருக்கின்றனவா?

ஸ்ரீகிருஷ்ணன்: இல்லை என்றால் உனக்குக் கொடுப்போமா? இந்தா, வாங்கிக்கொள்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணன் தன் உடலிலிருந்து நகைகளைக் கழற்றத் தொடங்கினான். கொள்ளைக்காரன் சொன்னான்: ''தம்பி, நீ கொடுப்பதானால் என் மேல்துண்டில் அவற்றை வைத்துக் கட்டிக் கொடு. ஆனால் பார்த்துக்கொள் அப்பனே, உனக்கு மனமில்லாமல் கொடுப்பதானால் ஒன்றுமே தர வேண்டாம். என் ஆசை எல்லாம் உன் அழகான முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதும் உன் திருவடிமீது தலை வைத்து இருப்பதுமே ஆகும்.''

ஸ்ரீகிருஷ்ணன்: அதென்ன அப்படிச் சொல்கிறாய்? மனம் விரும்பித்தான் நகைகளைக் கொடுக்கிறோம். அடுத்த முறை வா; இன்னும் நிறையக் கொடுக்கிறோம்.

இவ்விதம் சொல்லிக்கொண்டே ஸ்ரீகிருஷ்ணன் எல்லா நகைகளையும் கொள்ளைக்காரனின் மேல்துண்டில் தானே கட்டி அவன் கையில் கொடுத்தான். கொள்ளைக்காரன் அதைப் பெற்றுக்கொண்டு, ''என்ன தம்பி, நகை கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. உன் தரிசனத்தை மட்டும் அவசியம் கொடு'' என்று சொன்னான்.

ஸ்ரீகிருஷ்ணன்: இரண்டும்; நகையும் கொடுப்போம், தரிசனமும் கொடுப்போம்.

கொள்ளைக்காரன் நகைகளுடன் தன் வீடு நோக்கி நடந்தான். வழியெல்லாம் அவன் மனம் ஆனந்தக்கடலில் நீந்திக்கொண்டிருந்தது.

4

மறுநாள் இரவு கொள்ளைக்காரன் பாகவதரைச் சென்று சந்தித்தான். தான் கண்ட இரண்டு சிறுவர்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவரிடம் சொல்லி, நகை மூட்டையையும் அவர் முன்னால் வைத்தான். ''பாகவதரே, எவ்வளவு நகை கொண்டு வந்திருக்கிறேன் பாரும்! உமக்கு எவ்வளவு வேண்டுமோ எடுத்துக்கொள்ளும்!''

பாகவதர் பார்த்தார். அவருக்கு வாய் அடைத்துவிட்டது! வியப்பால் கண்கள் அகல விரிந்தன. அவர் கதையாய் வர்ணித்த அத்தனை நகைகளையும் கொண்டு வந்துவிட்டானே இந்தக் கொள்ளைக்காரன்! கனவா? நனவா? இல்லை, நனவுதான்! அதே நகைகள்! அதே புல்லாங்குழல்! சந்தேகமே இல்லை, பகவானுடைய நகைகளேதான்! எந்தப் பரமபுருஷனைத் தரிசிக்க யோகிகள் ஊண் உறக்கத்தை மறந்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்கிறார்களோ, அப்படிக் கடுந்தவம் இயற்றியும் தரிசிக்க முடிவதில்லையோ, அந்தப் பரமபுருஷனை இந்தக் கொள்ளைக்காரன் தரிசித்தானா? ஆச்சரியம்! ஆச்சரியம்! பாகவதர் கேட்டார்: ''சகோதரா, அந்தக் கண்ணனை எனக்கும் காட்ட முடியுமா?''

''என்ன அப்படிக் கேட்டு விட்டீர்? நாளைக்கே என்னுடன் வாரும். அவர்களைக் காட்டுகிறேன்'' என்றான் கொள்ளைக்காரன்.

பாகவதருக்கு முழு நம்பிக்கை ஏற்படவில்லை. என்றாலும் கொள்ளைக்காரனைச் சோதிக்கும் எண்ணத்துடன் அவனுடன் சென்றார். இருவரும் குறிப்பிட்ட இடத்தை அடைந்தனர். காடு, ஆறு, சிறிய குன்று, ஒரு புன்னைமரம். இரவு கழிந்து பொழுது விடியும் நேரம். கொள்ளைக்காரன் சொன்னான்: ''பாகவதரே, நீர் புதிய ஆள். உம்மைப் பார்த்து அந்தப் பிள்ளைகள் பயந்துபோய் ஓடிவிடக்கூடும். ஆகவே அந்த மரத்திற்குப் பின்னால் சென்று ஒளிந்துகொள்ளும்.''

அருணோதயமாயிற்று. புல்லாங்குழலின் இனிய ஓசை கேட்டது! கொள்ளைக்காரன் மகிழ்ச்சியால் துள்ளினான்: ''பாகவதரே! கேட்டீரா! கேட்டீரா? புல்லாங்குழல் ஒலிக்கிறது! பிள்ளைகள் வரப்போகிறார்கள்!''

''எங்கே? எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே!'' என்றார் பாகவதர்.

''என்ன? கேட்கவில்லையா? சற்று இங்கேயே இரும். எவ்வளவு தூரத்தில் அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள், பார்க்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே கொள்ளைக்காரன் மரத்தின் உச்சிக்கு ஏறிவிட்டான்.

''பாகவதரே! அதோ, அதோ வந்துகொண்டிருக்கிறார்கள்! அவர்களின் உடலிலிருந்து வீசும் தெய்விக ஒளி வனம் முழுவதும் பரவியிருக்கிறது!'' என்று சொல்லிக்கொண்டே ஏறிய வேகத்தில் கீழே இறங்கினான்.

''எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே!'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினர் பாகவதர்.

''என்ன! உமக்குக் காடு தெரிகிறது, குன்று தெரிகிறது, ஆறு தெரிகிறது. ஆனல் அந்தப் பையன்கள் தெரியவில்லையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் கொள்ளைக்காரன்.

பாகவதர் சொன்னர்: ''ஒரு காரியம் செய். ஸ்ரீகிருஷ்ணனை நீ பார்க்கிறது உண்மையானல் அவனிடம், 'எனக்கு நீ கொடுக்கும் நகைகளை இந்தப் பிராம்மணனிடம் கொடு' என்று சொல்.''

அதற்குள்ளாக ஸ்ரீகிருஷ்ணனும் பலராமனும் கொள்ளைக்காரனின் அருகில் வந்துவிட்டார்கள். கொள்ளைக்காரன் ஆவலோடு, ''வாருங்கள், வாருங்கள், பிள்ளைகளே! உங்களுக்காக நான் எவ்வளவு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன், தெரியுமா?'' என்று கூவினன்.

ஸ்ரீகிருஷ்ணன் புன்சிரிப்புடன், ''நகை வேண்டுமா?'' என்று கேட்டான்.

கொள்ளைக்காரன், ''இல்லையப்பா. எனக்கு நகை வேண்டாம். முன்பு நீ கொடுத்ததையே திருப்பிக் கொடுக்கக் கொண்டு வந்திருக்கிறேன். நான் உன்னைப் பார்க்கிறேன், உன்னேடு பேசுகிறேன். ஆனல் இந்தப் பாகவதரின் கண்ணுக்கு உன்னைத் தெரியவில்லையாம். நான் சொல்வதை நம்ப மறுக்கிருர். அதற்காக இவரையே என்கூட அழைத்து வந்திருக்கிறேன். இவருக்கு உன்னைக் காட்டு. அப்போதுதான் நான் சொல்வதை இவர் நம்புவார்'' என்ருன்.

ஸ்ரீகிருஷ்ணன், ''நண்பா, இந்தப் பாகவதர் நன்ருகச் சாஸ்திரம் படித்தவர், படித்ததைச் சொல்லும் திறமையும் படைத்தவர், வயதானவர், நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்கிறவர்; இதெல்லாம் சரி; ஆனல் உன்னைப் போல நம்பிக்கையும் உறுதியும் இவர் உள்ளத்தில் ஏற்படவில்லையே! ஆகையால் இவர் என்னைப் பார்க்கும் தகுதி பெறவில்லை'' என்ருன்.

கொள்ளைக்காரன், ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ இவருக்கு உன்னைக் காட்டியே ஆகவேண்டும். இல்லாவிட்டால் இப்போதே உன் காலடியில் விழுந்து என் உயிரை விட்டு விடுவேன்'' என்ருன்.

ஸ்ரீகிருஷ்ணன், ''சரி, நான் சொல்லுகிறபடி செய். நீ என் கையையும் பாகவதர் கையையும் பிடித்துக்கொள்'' என்ருன்.

ஸ்ரீகிருஷ்ணன் சொல்லி முடிப்பதற்குள் இருவருடைய கையையும் பிடித்தான் கொள்ளைக்காரன். என்ன அற்புதம்! பாகவதரின் அகக்கண் திறந்தது! பகவான் புவனமோகனப் புன்னகையுடன் கூடியவனுக, புல்லாங்குழல் ஏந்தியவனுகக் காட்சி தந்தான். கொள்ளைக்காரனும் பாகவதரும் இறைவனின் திருவடியில் வீழ்ந்தனர்.

பகவான் கற்பக மரம்; பக்தர்கள் வேண்டுவதைத் தருகிறவன். ஒருவனுக்குக் காட்சி தருகிருன்; மற்றவன் காண அனுமதிப்பதில்லை! இது அவன் லீலை!

ஆனல், நம்பிக்கை என்ற கண் கொண்டு காணும் பக்தன், தான் விரும்பும் வடிவத்தில் பகவானைத் தரிசிக்கிருன். கொள்ளைக்காரன், பாகவதர் என்ற வேற்றுமை பகவானுக்கு இல்லை. அவன் வேண்டுவது, அசையாத நம்பிக்கை கொண்ட பக்தியுள்ளம். அன்பு, அன்பு! இதைத்தான் ஆண்டவன் விரும்புகிருன். நாமும் அந்தக் கொள்ளைக்காரனைப் போல மன்னிப்பும், அந்தப் பக்த சிரோமணியைப் போல ஆண்டவனிடம் அசையாத நம்பிக்கையும் வைத்திருந்தால், அவரை நிச்சயம் இந்த ஊனக் கண்களாலேயே காண்போம் என்பதில் ஐயம் உண்டோ?

தலைநரைத்த முதியவரின் எதிரில் உட்காராமல் எழுந்து நில். முதியோரையும் பெரியோரையும் மதித்து அவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்.

—யூத சமயம்

நண்பர்களும் உறவினர்களும் ஒருவனைச் சுடுகாட்டில் விட்டு வந்துவிடுகிருர்கள்; அவனேடு யாரும் கூடப் போவதில்லை. அவன் செய்த பாவ புண்ணியச் செயல்களே அவனைத் தொடருகின்றன.

—மகாவீரர்

ஆன்மிக உரையாடல்

அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்
தமிழாக்கம்: **ரா. கணபதி**

> அன்பின் வடிவமாய் விளங்கிய அன்னை, சீடர் ஒருவரின் கேள்விக்குத் தந்த பதில்கள் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

சீடர்: ''அம்மா! 'சேவா ஆசிரமங்கள் மருத்துவசாலைகள் முதலியன நடத்துவது, புத்தகங்களும் பத்திரிகைகளும் பிரசுரிப்பது, கணக்கு வைத்துக்கொள்வது முதலான காரியங்கள் ஒரு துறவியின் லட்சியத்துக்கு அனுசரணையானவை அல்ல. ஸ்ரீராமகிருஷ்ணர் இம்மாதிரி ஏதேனும் எப்போதேனும் செய்ததுண்டா? (ஸ்ரீராமகிருஷ்ண) மிஷனில் வைராக்கிய உணர்வோடு சேரும் இளைஞர்களின் மீது இவ் வேலைகளைச் சுமத்துவது பரிதாபமாகும். சாதகனான ஒருவன் ஏதேனும் காரியத்தில் ஈடுபடலாமாயின் அது ஜபம், தியானம், விதிவத்தான பூஜை முதலியனதாம். மற்ற விதமான வேலைகளில் லௌகிகம் நிரம்பியுள்ளது. அவை பகவானிடமிருந்து ஒருவனைத் திசை திருப்புபவையே' என்று சில பக்தர்கள் சொல்கிறார்கள்.

அன்னை: ''அவர்கள் சொல்வதற்குச் சற்றும் காது கொடுக்காதே. காரியங்கள் இல்லாவிடில் நாள் முழுதும் ஒருவன் என்னதான் செய்வது? இரவும் பகலும் தியானம் செய்துகொண்டே இருப்பது சாத்தியமா என்ன? ஸ்ரீராமகிருஷ்ணர் சமாசாரம் வேறே. பொது ஜனங்களுக்குப் பிரயோஜனமாகிற காரியத்தைச் செய்வதால் தான் (ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த) உங்களுக்கு வயிற்றுக்குக் கிடைக்கிறது. இல்லாவிட்டால் நீங்கள் வீடுவீடாகப் பிக்ஷைக்குத்தான் போக வேண்டியிருக்கும். அதனால் உங்கள் ஆரோக்கியம் குலைந்து போகும். அதுவுமின்றி, முன் காலம் மாதிரி இப்போதெல்லாம் யார் சன்னியாசிகளுக்குப் பிக்ஷை போடுகிறார்கள்? இம்மாதிரியான கண்டன விமர்சனங்களை லட்சியம் பண்ணாதே. ஸ்ரீராமகிருஷ்ணர் உனக்கு எப்படி வழி காட்டுகிறாரோ அந்த வழியிலேயே போ. (ஸ்ரீராமகிருஷ்ண) மடம் இந்த (பொதுத் தொண்டு)ப் பாதையில்தான் நடத்தப்படும் இதற்குத் தங்களைச் சரிப்படுத்திக் கொள்ள முடியாதவர்கள் ஸ்தாபனத்தை விட்டே போக வேண்டியதுதான்.

''ஒரு யாத்திரை முடித்து வந்த மணி மல்லிக், குருமகராஜைப் பார்க்கப் போனார். 'நல்லது, நீ (யாத்திரையில்) சாதுக்கள் எவரையேனும் சந்தித்தாயா?' என்று குருமகராஜ் அவரைக் கேட்டார். 'பார்த்தேன். ஆனால் அவர்கள் பணம் கேட்கிறார்கள்' என்று மணி மல்லிக் சொன்னார். அதற்கு குருமகராஜ், 'சரி, அவர்கள் அப்படி எவ்வளவு பணம்தான் கேட்டுவிட்டார்கள்?



கஞ்சாவோ புகையிலையோ புகைப்பதற்காக ஒரு தம்படி அல்லது இரண்டு தம்படி கேட்டிருக்கக் கூடும்; அவ்வளவுதான். உனக்கு மிக உயர்ந்த உணவு, மிக உயர்ந்த வாஸ ஸ்தானம், கட்டில் மெத்தை இத்யாதி இத்யாதி வேண்டியிருக்கின்றன. அவர்களுக்குப் புகைப்பதற்கு ஒரு தம்படிதான் தேவைப்படுகிறது. அதுகூட அவர்களுக்குக் கிடைக்கக் கூடாதா? உங்களைப் போன்ற ஜனங்களுக்கே ஏக போக்கியமாக எல்லாச் சந்தோஷமும் கிடைக்க வேண்டும்; ஒரு சாதுவுக்குப் பைசா பெறுமான புகைப்பிடிப்பும் கூடாது என்கிறீர்களா?' என்று பதில் சொன்னார்.''

சீடர்: ''உணவு விஷயத்தில் ஒருவர் கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகள் என்ன?''

அன்னை: ''சிராத்த உணவை உண்ணலாகாது என்று குருமகராஜ் தம் பக்தர்களுக்கு அறிவுரை சொல்வது வழக்கம். ஏனெனில் அவ்வுணவு பக்திக்குக் குந்தகமானது. அது தவிர, எந்தவித உணவையும் சுவாமிக்கு நிவேதனம் செய்துவிட்டு நீ உண்ணலாம். எதை உண்டாலும் அதை முதலில் பகவானுக்கு அர்ப்பணம் செய்து, பிறகு அவனது பிரசாதமாக உட்கொள்வாய். அப்படிச் செய்தால் உன் இரத்தம் சுத்தமாகும்; இரத்தம் சுத்தமானால் உன் சித்தமும் சுத்தமாகும்.''

சீடர்: ''ஒரு நாளில் எந்தச் சமயம் தியானத்துக்கு ஏற்றது?''

அன்னை: ''அதிகாலையும், மாலைச் சந்தியுமாகும்—அதாவது பகலில் இரவு கலக்கிற சமயமும், இரவில் பகல் கலக்கிற சமயமும். இவை தியானத்துக்கு ஏற்ற மிகச் சிறந்த நேரங்கள். ஒருவர் ஒழுங்கு தப்பாமல் தினமும் குறித்த மணிகளில் தியானம் செய்ய வேண்டும். எந்தச் சமயத்தில் சுப முஹூர்த்தம் வந்து தெய்வ தரிசனம் கிட்டுமோ, யார் அறிவார்? சற்றும் முன்னறிவிப்பு இன்றித் திடுமெனவே இப்படிப்பட்ட தருணம் வருகிறது. ஆகையால், மனம் என்னதான் சஞ்சலத்தில் இருந்தாலும் ஒருவர் தினசரியைக் கிரமத்தை வழுவாது பின்பற்ற வேண்டும்.''

சீடர்: ''ஆனால் ஒவ்வொருவருக்கும் வேலையைப் பற்றிய விசாரங்கள், ஆரோக்கியப் பிரச்னை இவை இருக்கின்றனவே. மனமும் சில சமயங்களில்தான் அடங்குகிறது; சில சமயம் அது மிகவும் கொந்தளிக்கிறது.''

அன்னை: ''ஆரோக்கியக் குறைவு ஏற்படுவதை எவரும் தவிர்க்க முடியாதுதான். வேலை விஷயமாக ஒருவன் என்றேனும் மிகவும் உபத்திரவப்பட்டால், அன்று அவன் ஆண்டவனை வெறுமே சற்று ஸ்மரித்து, நமஸ்காரம் செய்தால் போதுமானது. அவ்வப்போது மனம் கொந்தளிப்பது சகஜம்தான். ஏனென்றால் அது இயற்கையிலேயே உள்ளடங்கியது. ஆகையால் அதில் மாறிமாறி வெள்ளம் வருவதும் வடிவதுமாகத்தான் இருக்கும்.''

ஸ்ரீராமகிருஷ்ண மடம், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றின் பொதுத் தலைவர் **ஸ்ரீமத் சுவாமி விரேச்வரானந்தஜி மகராஜ்** அவர்கள் தென்னாட்டிற்கு விஜயம் செய்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுவாமிஜியின் சுற்றுப்பயணத் தேதியும் இடமும் வருமாறு :

1978

பெங்களூர்	மார்ச்	25—27 வரை
மங்களூர்	மார்ச்	27—31 வரை
மைசூர்	ஏப்ரல்	1— 4 வரை
பெங்களூர்	ஏப்ரல்	4—10 வரை
நாட்டறம்பள்ளி	ஏப்ரல்	10—15 வரை
கோயம்புத்தூர்	ஏப்ரல்	15—18 வரை
திருச்சூர்	ஏப்ரல்	18—23 வரை
காலடி	ஏப்ரல்	23—26 வரை
திருவல்லா	ஏப்ரல்	26—29 வரை
திருவனந்தபுரம்	ஏப்ரல்	29— 5 மே வரை
சென்னை	மே	5—12 வரை

தாங்கள் தங்கள் நண்பர்களுடன் வந்திருந்து சுவாமிஜியைத் தரிசிக்கலாம்.

—**சுவாமி தபஸ்யானந்தர்**



வாழும் வழி

சுவாமி அபேதானந்தர்

மனம் சஞ்சலப்பட்டு நம்மை வேதனைக்கு உட்படுத்துவதை அறவே தவிர்ப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. கர்மபலன்களை, அவை நல்ல பலன்களாக இருந்தாலும் சரி, அல்லது கெட்ட பலன்களாக இருந்தாலும் சரி, இறைவனுடைய திருவடிகளில் சமர்ப்பித்து விடுவதே அந்த வழியாகும். ஆனால் இதை உறுதிப்பாட்டுடன் செய்ய வேண்டும். இவ்விதம் செய்வதனால் மனச்சஞ்சலம் மறைந்துவிடும்.

ஜபமோ தியானமோ செய்ய வேண்டும் என்ற படபடப்புடன், அதற்காகத் தனிமையை நாடி ஓடிவிட வேண்டும் என்ற அவசியமே இல்லை. ''ஒரு மூலையிலோ அல்லது காட்டிலோ அல்லது உன் மனதிலோ தியானம் செய்வாயாக'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம். பெரிய ஒரு நகரத்தில் வாழ்கிற சாதகன் ஒருவன் கொசுவலைக்குள் உட்கார்ந்து கொண்டு, இரவுநேரத்தில் இடையூறு எதுவும் இல்லாமல் சுலபமாக ஜபமும் தியானமும் செய்யலாம்.

வேலை செய்வதைப் பற்றி நீ ஏன் பயப்பட வேண்டும்? கர்மத்தின் மூலம் மனம் தூய்மையை அடையாவிட்டால் உண்மைஞானம் கிட்டவே கிட்டாது. அற்ப மனம் படைத்தவன் எங்கே சென்றாலும் அந்த மனமும் அவனுடன் கூடவேதான் வரும்; அவனைவிட்டு அது பிரிந்து இருக்காது. அவனிடமேதான் அது நிலைத்துத் தங்கும்.

தீய சிந்தனைகள் உள்ளத்தில் எழுவதற்குக் காரணம், பழைய பழக்க வழக்கங்களின் சக்தியே ஆகும். தொடர்ந்து பழகுவதன்மூலம் நல்ல பழக்கங்களை அமைத்துக்கொண்டால், படிப்படியாகத் தீய சிந்தனைகள் உள்ளத்தில் எழாமற் போகும். ஆனால் சிந்தனைகள் நாம் தொடர்பு கொள்ளும் மக்களின் மூலமே வலிமை அடைகின்றன. எனவே, நல்லவர்களின் தொடர்பை நாடவும், தீயவர்களின் தொடர்பைத் தவிர்க்கவும் வேண்டும்.

ஜபத்தைத் தொடர்ந்து பழகுவதன் மூலம் மனம் உறுதி பெற்றால், தியானம் தானாகவே சித்திக்கிறது.

நீ மனதின் சாட்சியாக மட்டுமே இருந்து கொண்டிருக்கிறாய்-இந்த உண்மையை உறுதியாக அறிந்துகொள். காமம், கோபம் ஆகிய பயங்கரச் சக்திகள் மனதுடன் தொடர்பு கொண்ட குணங்கள் ஆகும். ஆகவே அவற்றினால் ஆத்மாவைத் தொட இயலாது. இரண்டு புருவங்களுக்கும் இடையிலுள்ள ஆஜ்ஞா சக்கர நிலைக்கு உன் மனதை உயர்த்தி, 'காமம் கோபம் ஆகிய தீய சக்திகள் ஆத்மாவைச் சேர்ந்தவையல்ல' என்ற உண்மையை ஆழ்ந்து சிந்தித்தபடியே இரு. இந்தக் கருத்தையே ஆழ்ந்து தியானம் செய்து வா. 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற மகாவாக்கியத்தைத் திரும்பத் திரும்ப உச்சரித்தபடியே, சாட்சியாகவும் பரம்பொருளாகவும் நிர்க்குணமாகவும் அகத்தூண்டுதலைத் தரும் தெய்வசக்தியாகவும் உள்ள ஆத்மாவைத் தியானித்து வா.

உன் மனம் சஞ்சலப்பட்டுள்ள இந்த நிலையில், கடவுளிடம் சரண்புகுந்து அவருடைய இச்சைக்கு முழு அளவில் பணிந்திருப்பதே உன் கடமையாகும். உனது அற்ப உள்ளத்தின் கோரிக்கைகள் நிறைவேறப் போவதில்லை; ஆகவே அந்த அற்ப உள்ளத்தைப் புறக்கணித்துத் தெய்வசித்தத்தின்படியே முழு அளவில் வாழ்ந்து வா. இவ்விதம் செய்வதனால் நீ மன அமைதி பெறுவாய்.

உலக வாழ்க்கையின் பந்தத்தை நீ உணர்ந்து வருகிறாய் என்பதும், அமைதி காணாமல் தவிக்கிறாய் என்பதும்-இவைகூட ஆன்மிக உலகை நோக்கி நீ முன்னேறிக்கொண்டிருப்பதற்கு ஓர் அறிகுறி ஆகும்.

நீ செய்து வரும் செயல்களே கடவுள் வழிபாடு என்பதை உணர்வாயாக. நீ ஆண்டவனுக்குத் தொண்டு செய்கிறாய் என்பதை உள்ளத்தில் உறுதியுடன் இருத்தி, கர்மபலன்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்துவிடு. கடவுளின் சித்தப்படியே எல்லாம் நடக்கட்டும் என்று விட்டுவிடும் மனப்பான்மையை நீ பழகி வருவதால், உனக்கு மன அமைதி கிடைப்பது நிச்சயம்.

அற்புதத் திருவந்தாதி விளக்கம்:

கொன்றையும் கனியும்

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

காரைக்காலம்மையார் இன்னும் இறைவனுடைய சடைமுடியை விட்டுத் தம் கண்ணை அகற்றவில்லை. கொன்றைமலரை அணிந்த அந்தச் சடைமுடியை உற்று உற்றுப் பார்க்கிறார். அங்கே வலப் பக்கத்தில் அணிந்திருக்கும் அழகிய சந்திரனைப் பார்க்கிறார். தம்முடைய பார்வையைச் சற்றே இறக்கிப் பார்க்கிறார். எம்பெருமானுடைய வாம பாகத்தில் ஒட்டி உறைகின்றாள் உமாதேவி.

ஐயனுடைய சடையையும் அங்குள்ள கொன்றையையும் பார்த்த கண்ணோடு அம்மையினுடைய கூந்தலையும் பார்க்கிறார். இமாசலத்தில் தோன்றிய உயர்குலப் பாவை உமாதேவி.



அவள் குழல் கருகருவென்றிருக்கிறது. அப்பனுடைய சடை சிவப்பு, அம்மையுடைய குழல் கறுப்பு. இறைவன் தலைமேல் கோலமதியை வைத்திருக்கிறான்; ஆகையால் அதன் ஒளியில் அவன் தலையிற் சூடிய கொன்றை நன்றாகத் தெரிகிறது.

பெண்களின் கூந்தலுக்குப் பலவகை உவமைகளைப் புலவர்கள் சொல்வார்கள். கருமணலைப் போல இருக்கிறதென்பார்கள்; மேகத்தை உவமை கூறுவார்கள்; பாசியை ஒத்திருக்கிறதென்பார்கள்; இருளைப் போல இருக்கிறது என்றும் சொல்வதுண்டு.

இப்போது காரைக்கால் அம்மையார் கவிதா உணர்வோடு தம் பார்வையை இறைவன்பால் செல்ல விட்டுக்கொண்டிருக்கிறார். அவனுடைய சடைக்கு எதை உவமை சொல்வது, அவன் முடியில் வைத்த நிலவின் கதிருக்கு எதை ஒப்பாக்குவது, இரண்டும் இணைந்ததற்குப் பொருத்தமான உவமை எது என்றெல்லாம் அவர் தம் எண்ணங்களை ஓடவிட்டார். பொன்னோடு வெள்ளிப்புரியை இணைத்து வைத்தது போல இருக்கிறது என்று பாடினார், இன்னும் உவமை தேடும் உள்ளநிலை அவருக்கு மாறவில்லை. அப்பனுடைய சடைக்கும் அம்மையினுடைய கூந்தலுக்கும் உவமையினால் முடிச்சுப் போடப் பார்க்கிறார்.

அம்பிகையின் கூந்தலைக் கவனிக்கிறார். இறைவன் பங்கில் ஒட்டி இணைந்த நிலையில் அவன் சடையும் அவள் கூந்தலும் அருகருகே இருக்கின்றன. அந்தச் சடையில் கொன்றை மலர் பளிச்சென்று தோன்றுகிறது. இந்த இணைப்புக்கு எதை உவமை சொல்வது?

மாதர் கூந்தலுக்குக் கொன்றைநெற்றை உவமை சொல்வதுண்டு. அது நீளமாகக் கறுப்பாக இருக்கும். காய் பசுமையாக இருக்கும். அது பழமாகி நெற்றானால் நல்ல கறுப்பாக மாறிவிடும். நீட்சியும் கருமையும் செறிவும் உடையதாக இருப்பதால் கொன்றைப் பழக் கொத்து அல்லது நெற்றுக்களின் கொத்தை மகளிர் கூந்தலுக்கு உவமையாக எடுத்துச் சொல்வார்கள் புலவர்கள்.

காரைக்கால் அம்மையாருக்கு இது நினைவுக்கு வருகிறது. இறைவன் சடைமேல் கொன்றை மலர்கள் இருக்கின்றன. அம்பிகையின் கருங்குழல் அருகே தோன்றுகிறது. மலரும் கனிக்கொத்தும் ஒரே இடத்தில் நெருக்கமாக இருப்பது இயல்பு. இங்கும் கொன்றை மலரும், அதனருகே அந்த மலர்களிலிருந்து தோன்றிய பழக்கொத்தும் இருப்பது போல அவர் கண்டார். உவமை கிடைத்துவிட்டது.

இறைவன் சடையின் மேல் கொன்றை பூத்திருக்கிறது. முன்பு இருந்த மலர்கள் உதிர்ந்து காய்த்துப் பழமாகிக் கொத்தாக அருகே காட்சி தருகின்றன என்று சொல்லலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

'அம்பிகையின் கரிய குழற்கற்றைகள் இறைவன் சடையின் மேலுள்ள அந்தக் கொன்றை மலரில் விளைந்த கனிகள் பக்கத்தில் தாழ்ந்து தொங்குவன போல உள்ளன' என்று பாடினார். கொன்றைப் பூவும் கொன்றைப் பழக்

கொத்தும் இணைந்து இப்போது காட்சியளிக்கின்றனவாம்.


சடைமேல்அக் கொன்றை
தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே
போலும்—முடிமேல்
வலப்பால்அக் கோல
மதியைத்தான் பங்கின்
குலப்பாவை நீலக் குழல்.

[தன்னுடைய திருமுடியின் மேல் வலப் பக்கத்திலே அந்த அழகிய பிறையை வைத்த சிவபெருமானுடைய ஒரு பாதியில் எழுந்தருளியிருக்கும் உயர்குலப் பெண்ணாகிய உமாதேவியின் கருமையான கூந்தற் கற்றைகள், இறைவன் சடையின் மேல் சூடியிருக்கும் அந்தக் கொன்றை மலர்கள் முதிர்ந்து உண்டாக்கிய கனிகள் உருவாகி வந்து பக்கத்திலே சார்ந்து கீழே தொங்குவன போலத் தோன்றும்.

கனிகள் என்றது நெற்றுக் கொத்துக்களை. புடை - பக்கத்தில். தாழ்தல் - கீழே தொங்குதல். கோலம் - அழகு. பாவை - பாவை போன்ற உமாதேவி; ஆகுபெயர். குலம்-உயர்வும் ஆம். குழல்-கூந்தற் கற்றைகள். நீலம்-கறுப்பு; ''நீலநிறக் காக்கைதனைப் பேசுவிக்கலாமோ'' என்பது போலக் கருமையையும் நீலமாகச் சொல்லுதல் மரபு.

நீலக்குழல் தாழ்ந்தனவே போலும் என்று கூட்டுக.]

இது **அற்புதத் திருவந்தாதியில் 50-ஆவது** பாடல்.



தியான வேளையிலே......

எப். ஜே. அலெக்சாண்டர்

ஆழ்ந்த அமைதி நிலவும்போது கடவுளின் குரல் ஒலிக்கிறது. அது கூறுவதாவது:—''நினைவில் வை. எப்போதும் இதை நினைவில் வைத்திரு: 'இதயத் தூய்மை உள்ளவர்கள்தாம் கடவுளைக் காண்பார்கள்.' முதல்முதலில் தேவைப்படுவது பரிசுத்தம்தான். ஆசையின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள் எப்படித் தீவிரமாக இருக்கிறார்களோ, அப்படியே நீயும் தூய்மையாக இருப்பதில் தீவிரமாக இருந்து வருவாயாக. பரிசுத்த நிலையை அடைவதற்குத் தீவிர ஆவல் கொள்வாயாக!

''ஆழ்ந்தும், விடாமுயற்சியுடன் கூடிய உறுதியுடனும் தூய்மையைத் தேடு. அது ஒன்றுதான் நல்ல பயனைத் தரக்கூடியது. எனது பரமபக்தனாகிய பிரகலாதன் என்னிடம் பிரார்த்தனை செய்ததை நினைவில் வை: 'பகவானே! சில நிமிடங்கள் நிலைத்திருக்கும் புலன் நுகர்ச்சிகளில் உலக மக்கள் எப்படிப்பட்ட தீவிர ஆவல் கொள்கிறார்களோ, அப்படிப்பட்ட தீவிர பக்தியை உன்னிடத்தில் எனக்கு அருள்வாயாக.'

''கடவுள் உறையும் கர்ப்பக்கிருகத்தின் முன் அறை போன்றது பரிசுத்தம். கடவுளைப் பற்றிச் சிந்தனை செய்வதற்கு முன்பு தூய்மையைக் குறித்துச் சிந்தனை செய். உயர்வற உயர் பொருளாகிய கடவுள் உறையும் மாளிகைக்குள் தியானம் அழைத்துச் செல்கிறது. அந்தத் தியானம் என்ற கதவுகளைத் திறக்கும் சாவியாகப் பரிசுத்தம் விளங்குகிறது.

''கடவுளின் வலிமை என்னும் என்னுடைய சமுத்திரத்தில் குதித்து மூழ்கிவிடு. முயற்சி செய்ய வேண்டாம்! தேட வேண்டாம்! **நான் இருக்கிறேன்** என்பதை உணர்ந்துகொள். இந்த அறிவும், எல்லாவற்றிலும் என் இச்சைக்கு உட்பட்டிருப்பதும் உன்னைக் காப்

பாற்றிவிடும். பயம் கொள்ளாதே! நீ என்னுள் இல்லையா! நான் உன்னுள் இல்லையா!

''உயர்ந்தது என்று மனிதர் நினைப்பவை எல்லாம் கால வெள்ளத்தில் அழிந்துவிடும் என்பதைத் தெரிந்துகொள். மரணம் எங்கும் வியாபித்து, உருவம் கொண்ட எல்லா உயிர்களையும் விழுங்கிக்கொண்டிருக்கிறது. மரணமும் மாறுதலும் ஆன்மா ஒன்றைத் தவிர, மற்றுமுள்ள எல்லாவற்றையும் வலைப்படுத்தித் தளையிடுகின்றன. இதை அறிந்துகொள். இந்த அறிவைப் பெறும் வழி தூய்மை. அதுவேதான் அஸ்திவாரம். தூய்மையைத் தொடர்ந்து பயமின்மை, சுதந்திரம், நீயும் நானும் ஒன்றுதான் என்னும் அனுபூதி ஆகிய எல்லாம் வரும்.

''புயல் அடிக்கட்டுமே. ஆனால் காமக்கனல் கொழுந்துவிட்டு எரியும்போது, மனம் குழம்பிச் சஞ்சலப்படும்போது—உடனே, உடனே அந்தத் தருணத்திலேயே என்னைக் கூவியழை! நான் உன் குரலைக் கேட்பேன். ஏனெனில் என் பக்தன் கூறியபடி, சின்னஞ்சிறு எறும்பு ஊர்ந்து செல்லும் சப்தத்தையும் நான் கேட்கிறேன். ஆகவே உன் கூக்குரலைக் கேட்டு விரைந்தோடி வருவேன். உள்ளன்போடு என்னை அழைப்பவர்களை நான் ஒருபோதும் கைவிட மாட்டேன். ஆகவே உள்ளன்போடு என்னைக் கூவியழை. அதோடு உறுதியாகவும் விடாப்பிடியாகவும் கூவியழை.

''நான் இந்தப் பிரபஞ்சம் அல்ல, இதைக் கடந்து நிற்கும் ஒரு பொருள்! இந்த உலகம் எனக்கு ஒரு பிணம் போலத்தான். நான் ஆன்மா ஒன்றைத்தான் கவனிக்கிறேன். வெளியே தோன்றும் பொருள்களின் மகிமையைக் கண்டு மயங்கி ஏமாந்துவிடாதே. தெய்வத்தன்மை என்பது உருவத்திலும் இல்லை; அதைப் பற்றிய எண்ணங்களிலும் இல்லை. அது பரிசுத்தமான, சுதந்திரமான, ஆன்மிகமான, ஆனந்தமான, உருவம் கொண்ட வெளித்தோற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட, எண்ணங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்ட சைதன்யம். அது ஒரு கறையையோ, பாவத்தையோ, தளையையோ, வரம்பையோ அறியாது; அறியவும் முடியாது. நீ அதே ஆன்மாவாக இருக்கிறாய்! இந்த அனுபூதி உனக்கு வரும். ஏனெனில் ஆன்மிக வாழ்க்கையின் நிச்சயமான குறிக்கோள் இதுதான்.

''ஞாபகப்படுத்திக்கொள்; மறந்துவிடாதே: நான் உன்னுடனேயே இருக்கிறேன். நான் உன்னுடனேயே வசிக்கிறேன். இந்தப் பிரபஞ்சத்துக்கெல்லாம் பிரபுவாகிய நான் உன்னுடனேயே வசிக்கிறேன். உன் பலவீனங்களிலெல்லாம் நான் உனக்குப் பலமாக நிற்கிறேன். உன் பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு அளிப்பவனாக இருக்கிறேன். நீ என்னைத் தேடி அடையும் முயற்சிகளில் நான் உனக்கு அன்பாக விளங்குகிறேன்.

''நான் உன் ஆன்மா. ஆன்மாவைப் பற்றிய மற்ற எண்ணங்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளி விடு. ஏனென்றால், உன் ஆன்மா என் ஆன்மாவைக்காட்டிலும் வேறுபட்டது என்ற எண்ணத்தில்தான் எல்லா அஞ்ஞானமும் பலவீனமும் அடங்கியுள்ளன. எழுந்திரு! ஒளிவீசும் ஒருவனே, நான் உனது ஆன்மா என்பதை அறிந்துகொள்! நான் உனது ஆன்மா!

''என் முன்னிலைக்கு உன்னைக் கொண்டு வரும் வழி பரிசுத்தம். இதில்தான் உனது கதி மோட்சம் அடங்கியிருக்கிறது. ஹரி: ஓம் தத் ஸத்!

''சாந்தி! சாந்தி! சாந்தி!''



உன் காலத்தை எப்போதும் உபயோகமாகவே செலவு செய். சோம்பலுக்கு இடம் தராதே. செய்ய வேண்டியதை உடனே செய்துவிடு. வேடிக்கைகளில் பொழுது போக்குவது வேலை முடிந்த பிறகே தவிர, வேலை முடியும் முன்னால் அல்ல. —ஸர் வால்டர் ஸ்காட்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை 600004

1978 ஏப்ரல் மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீராம நவமி

16-4-78 ஞாயிறு:	**பொதுக்கூட்டம்**
மாலை 5-30 முதல் 7-30 வரை	*தலைவர்: சுவாமி தபஸ்யானந்தர்* *பேசுபவர்: டாக்டர் என். வீழிநாதன்*
சத் சங்கம்: *ஞாயிறுதோறும்*	*மாலை 4 மணி முதல் 8 மணி வரை*
மாலை 4 முதல் 4-20 வரை	*ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (9-4-78 & 30-4-78)* *ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (2-4-78 & 23-4-78)*
மாலை 4-20 முதல் 4-30 வரை	*தியானம்*
மாலை 4-30 முதல் 5-30 வரை	*சொற்பொழிவு (தமிழ்)* 1. **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்**—*திரு வி. ஆர். கல்யாண சுந்தர சாஸ்திரிகள் (2-4-78)* 2. **ஸ்ரீ சீதா கல்யாணம்**—*திரு டி. ஆர். வைத்தீசுவரன் (9-4-78)* 3. **ஸ்ரீமத் பாகவதம்**—*திரு 'அண்ணு' சுப்ரமண்யம் (23-4-78)* 4. **ஸ்ரீ பூதத்தாழ்வார்**—*டாக்டர் ஆர். பாலசுப்பிரமண்யம் (30-4-78)*
மாலை 5-35 முதல் 6-30 வரை	*சொற்பொழிவு (ஆங்கிலம்)* 1. **பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்**—*சுவாமி தபஸ்யானந்தர் (2-4-78 & 9-4-78)* 2. **ஸ்ரீமத் பகவத்கீதை**—*சுவாமி கபீரானந்தர் (23-4-78 & 30-4-78)*
சிறப்புச் சொற்பொழிவுகள்: *சனிக்கிழமைகளில்* *மாலை 5-45 மணிக்கு*	1. **ஸ்ரீமத் பாகவதம்**—*திரு பி. இராமகிருஷ்ணன் (1-4-78)* 2. **ஸ்ரீமத் ராமாயணம்**—*டாக்டர் என். வீழிநாதன் (8-4-78)* 3. **நாராயணீயம்**—*திரு ஆர். கோதண்டராமன் (22-4-78)* 4. **ஈசாவாஸ்ய உபநிஷதம்**—*சுவாமி கிர்த்திதானந்தர் (15-4-78 & 29-4-78)*

வார நாட்களில் நடைபெறும் உரை நிகழ்ச்சிகள்—*(மாலை 5-45 மணிக்கு)*

திங்கள்:	**பக்தி யோகம்**—*சுவாமி அமிர்தானந்தர் (ஆங்கிலம்)*
செவ்வாய்:	**ஸ்ரீமத் அத்தியாத்ம ராமாயணம்**—*சுவாமி கபீரானந்தர் (ஆங்கிலம்)*
புதன்:	**மகாபாரதம்**—*திரு 'அண்ணு' சுப்ரமண்யம் (தமிழ்)*
வியாழன்:	**ஸ்ரீமத் பகவத்கீதை**—*சுவாமி கோலோகானந்தர் (ஆங்கிலம்)*
வெள்ளி:	**ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்**—*பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா (தமிழ்)*
வெள்ளி:	**ஸ்ரீமத் பகவத்கீதை** *(மாலை 6-30 மணிக்கு)* *—சுவாமி கோலோகானந்தர்* *(ஸ்ரீராமகிருஷ்ண மந்திரம், 18, தெற்கு மாட வீதி, திருவல்லிக்கேணி)*

விசேஷ தினங்கள்:

23-4-78 ஞாயிறு:	*அந்தர் யோகம் (சாதனை தினம்)* *3-4-78 & 19-4-78 ஆகிய* **ஏகாதசி தினங்களில்** *மாலை வழிபாட்டிற்குப் பிறகு* **ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம்** *நடைபெறும்.*

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

தொலைபேசி: **71231**

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பற்றி....

பத்திரிகைகளின் மதிப்புரை

சுவாமி விவேகானந்தர் நிறுவிய ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தமிழக மக்களுக்குப் பலவிதங்களிலும் தொண்டாற்றி வருகிறது. அதன் ஓர் அம்சமாகத் திகழ்வது ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.''

சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, வேதாந்தம், சித்தாந்தம், சமய சமரசம், சுவையான தத்துவக் கதைகள், உபநிஷத உண்மைகள், சைவ வைணவக் கருத்துக்கள் ஆகிய இத்தனையும் விஜயத்தில் இடம் பெற்று 'இராமகிருஷ்ண மணம்' கமழ்கிறது. தற்கால மக்களுக்கு ஏற்ற எளிய நடையில் கட்டுரைகள் எழுதப் பெறுகின்றன.

—கல்கி
24-4-1977

தற்கால நவீன மனப்போக்குக்கு ஏற்ற வகையில், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் காட்டிய வழியில் சிறந்த மனிதர்களை உருவாக்கும் இலட்சியத்துடன் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் தொண்டாற்றி வருகிறது. இந்து மதத்தைப் பற்றிக் குறிப்பாகவும், பொதுவாக ஏனைய பிற மதங்களையும் தழுவிய கருத்துக்களைத் தாங்கி, இன்றைய இளைஞர்களும் நாடிப் படிக்கும் வகையில் மதங்களைப் பற்றிய உண்மைகளை எடுத்து அளிக்கின்றது. மகான்களின் உன்னத வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளும், நடைமுறை வாழ்க்கையில் மதத்தைப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளும் இடம் பெற்று மிக்க பயனுள்ள மலராக வெளி வருகிறது.

ஆண்டுதோறும் வெளிவரும் சிறப்பு மலர், சந்தாதாரர்களுக்குக் கூடுதல் விலையில்லாமல் கிடைக்கிறது. தவிர, மடத்தின் வெளியீடுகள் சந்தாதாரர்களுக்கு, 5 சதவீதம் கழிவு நீக்கிக் கிடைக்கும்.

—தினமணி
22-5-77

நல்லதொரு சஞ்சிகை: சுவாமி விவேகானந்தரை மனமுவந்து ஏற்ற முதல் மாநிலம் தமிழ்நாடு. தமிழ் மக்களின் விருந்தோம்பும் பண்பையும் பெரியோரை மதித்துப் போற்றும் சிறப்பையும் சுவாமிகள் நேரில் கண்டு உள்ளம் மகிழ்ந்தார். அதன் விளைவாக இங்கு நிறுவப்பட்ட ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமம் இன்று சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. இந்த நிறுவனம் வெளியிடும் சிறந்த மாதப் பத்திரிகையான 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' அரிய கட்டுரைகளுடன் பக்த ஜனங்களுக்கு அமுதம் போன்று அமைந்திருப்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இப் பத்திரிகை மெய்யன்பர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்வு—வாக்கு மணிகளுடன் அரிய பேருண்மைகளை வெளியிட்டு உதவுகிறது.

—மஞ்சரி
செப்டம்பர் 1977

மயிலை ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து கடந்த 57 ஆண்டுகளாக ஆன்மிக மாதப் பத்திரிகையின் தொண்டு நீடித்து வரினும், அதனுடைய வளர்ச்சிக்கு மக்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது. அன்று முதல் இன்று வரை எம்மதத்தினருக்கும் உகந்தவண்ணம் பல ஆன்மிகப் போதனைகளைக் கொண்ட சிறந்த கட்டுரைகளைத் தாங்கி வருகிறது ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்''.

சமீப காலத்தில் அதன் நடையில் எளிமையான, சுவையானதொரு புதிய போக்குக் காணப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஒவ்வொரு கட்டுரையும் உள்ளத்தில் உறைந்து படிப்பவர்களிடையே ஆன்மிக வாழ்வின் அவசியத்தைப் பற்றிப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

வருடச் சந்தா ஏழே ரூபாய் கொண்ட இந்தப் பத்திரிகைக்குப் பெருமளவில் சந்தாதாரர்களாகிப் பத்திரிகையையும் தங்களையும் பயன்பெறச் செய்யும்படி வேண்டுகிறேன்.

—தினமணி
28-8-77

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தென்னாட்டுக் கிளையானது, தான் ஆற்றிவரும் வேதாந்தப் பணிக்குத் தமிழைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வருகிறது. வேதாந்தத் தத்துவத்தைத் தமிழிலேயும் திறம்பட விளக்க முடியும் என்பதனை நீண்ட காலமாகவே ஸ்ரீராமகிருஷ்ண மடம் நிரூபித்து வருகிறது.

இந்தப் பணிக்கென ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' என்னும் பெயரில் சிறந்த மாத இதழ் ஒன்றையும் சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடம் வெளியிட்டு வருகிறது.

இந்தப் பத்திரிகையின் இதழ்களை மாதந்தோறும் ஒருவர் தொடர்ந்து படித்து வந்தாலே, அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு மெய்ஞ்ஞானியாக முடியும்.

பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் பற்றிய விளக்கங்களெல்லாம் இனிய தமிழில் எளிய நடையில் ''ஸ்ரீராமகிருஷ்ண விஜய''த்தில் வெளிவருகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள் வாக்குகள் இதழ்தோறும் வெளியிடப்படுகின்றன. வேதாந்தப் பத்திரிகையானாலும் திருமுருக கிருபானந்தவாரியார், வித்வான் கி. வா. ஜகந்நாதன் போன்ற சித்தாந்திகள் பலரின் கட்டுரைகளும் வெளிவருகின்றன.

கல்கத்தாவிலுள்ள தலைமை மடத்து வேதாந்திகளின் வாழ்க்கைக் குறிப்புக்களும், போதனைகளும், சாதனைகளும் அடிக்கடி ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' பத்திரிகையில் வெளிவருகின்றன.

தமிழ்நாட்டில் தோன்றி மறைந்த தாயுமானவர், வள்ளலார், சி. சுப்பிரமணிய பாரதியார் ஆகிய மெய்ஞ்ஞானியருடைய அருட்பாடல்களையும் அடிக்கடி படிக்க முடிகின்றது. இந்தச் சமரச ஞானியர்களின் கருத்துக்களையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகானந்தர் போன்ற அருளாளர்களின் வாழ்க்கைக் கருத்துக்களோடும் நிகழ்ச்சிகளோடும் ஒப்பிட்டுக் காட்டும் கட்டுரைகளைப் பலமுறை படித்து நான் பயன் அடைந்திருக்கிறேன்.

''வேதாந்தக் கலையைத் தமிழின் மூலம் விளக்க முடியுமா?'' என்று வினா எழுப்பப்பட்டது, முன்னொரு காலத்திலே! அதற்கு 'முடியும்' என்று செயல்மூலம் விடையளித்த பெருமை தமிழ்நாட்டிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்திற்கே உரிமையாகும். இதனை நினைவில் கொண்டால், ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' பத்திரிகை தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வருவது புலனாகும்.

இந்தப் பத்திரிகையைத் தமிழ்மக்கள் ஆதரிக்க வேண்டும். குறிப்பாக, தெய்வபக்தர்களும் தேசபக்தர்களும் தவறாமல் வாங்க வேண்டும்.

—ம. பொ. சிவஞானம்
''செங்கோல்'' 30–10–77

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும், கருத்தாழம் கொண்டதாகவும், எழுத்தோவியங்கள் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெறாத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஆசிரியர்: சுவாமி சித்கனானந்தர்; துணை ஆசிரியர்: பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா
பதிப்பாளர்: சுவாமி சித்கனானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை 600004.
அச்சிடுபவர்: S. ராமஸ்வாமி, ராஜ்ஸ்ரீ பிரிண்டர்ஸ், 97 ஔவை ஷண்முகம் சாலை,
சென்னை 600086

படியுங்கள்! பாதுகாத்து வையுங்கள்!

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்கால சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஏற்றவகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்புமலர் உட்பட)	**ரு**	**7-00**
ஆயுள் சந்தா	**ரு**	**100-00**
தனிப்பிரதி		**70 காசு**

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 - ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. அன்பர்கள் தங்களுடைய சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் சிலரை சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்து கொள்கிறோம்.
2. தனிப்பிரதி விற்பனையோ, சந்தா சேர்க்கும் ஏஜண்டுகளோ குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லாததால், வாசக அன்பர்களே நண்பர்களைச் சந்தாதாரர்களாக்கி ஒத்துழைக்க வேண்டுகிறோம்.
3. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள், தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.
4. பெரியோர்கள், இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். **குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது பெரிய ஒரு உபகாரமாக இருக்கும்.** இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.
5. சந்தாதாரராக விரும்புபவர்களும், பத்திரிகை விற்பனையாளர்களும், பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு:

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

தொலைபேசி: **ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்**

71231 **மயிலாப்பூர் : : சென்னை-600 004**

ஆண்டுச் சந்தா: இந்தியா—ரூ. 7.00 இலங்கை—ரூ. 13 யு.எஸ்.ஏ.—$ 3.00
பிறநாடுகள்—£ 1.70 ஆயுள் சந்தா: இந்தியா—ரூ. 100 யு.எஸ்.ஏ.—$ 50.00
பிறநாடுகள்—£ 20.00 தனிப்பிரதி வெளிநாடு: ரூ.—௨

தனிப் பிரதி 70 காசு